



விலை ரூபா 40

பக்கங்கள் - 12


# ஒருவன்


ஆண்டு: 01 இதழ் : 34 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (22.11.2024)







# தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க சந்தர்ப்பம்

## அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

## இன, மத வேறுபாடுகளுக்கு இடமில்லை





(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு இனி நாட்டில் இடமில்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு என நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் வழங்கியுள்ள மக்கள் ஆணையும் இவற்றுக்கு எதிரானது. தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப சிறந்த சந்தர்ப்பம் உதயமாகியுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் அடுத்துவரும் நான்கு மாதங்களுக்காக இடைக்கால கணக்கறிக்கையொன்றை அரசாங்கம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பெப்ரவரி நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டு மார்ச் நடுப்பகுதிக்குள் நிறைவேற்றப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

அரச ஊழியர்களுக்கு வரவு-செல வுத் திட்டத்தில் (தொடர்ச்சி...) 02

## 29 பிரதி அமைச்சர்கள் நியமனம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

29 பிரதி அமைச்சர்கள் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களின் விபரம் வருமற்று,

01.பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ - பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

02.நாமல் கருணாரத்ன - விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர்

03.வசந்த பியதிஸ்ஸ - கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

04.நலின் ஹெவகே - தொழிற்கல்வி பிரதி அமைச்சர்

05.ஆர். எம். ஜயவர்தன - வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

06.கமகெதர திசாநாயக்க - புத்த

(முழுமையான விபரம் 3ஆம் பக்கம்)

## டக்ளஸ்௯க்கு பிடியாணை

முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு கொழும்பு மேலதிக நீதவானால் நேற்று வியாழக்கிழமை (21.11) பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகர் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான காசோலைகளை வழங்கி மோசடி செய்ததாக (தொடர்ச்சி.) 02

## சர்வதேச நாணய நிதியத்துடன் இன்று ஒப்பந்தம் கைச்சாத்து

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் இன்று வெள்ளிக்கிழமை கைச்சாத்திடப்பட உள்ளது. நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு மூன்றாம் கட்டமாக வழங்கப்பட்ட கடன் தொடர்பான மதிப்பாய்வை அடிப் படையாக கொண்டே பணியாளர் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் நான்காம் கட்டமாக இலங்கைக்கு 330 மில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச (தொடர்ச்சி...) 02

## கொடிகாமத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி



கொட்டும் மழைக்கு மத்தியிலும் யாழ்.கொடிகாமம் மாவீரர் நினைவேந்தல் மையத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி நினைவேந்தல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் முதன்மைச்சுடரை நான்கு(4) மாவீரர்களின் சகோதரரான சி.சிவநேசன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் (தொடர்ச்சி...) 02

## முல்லைத்தீவிலிருந்து ஜனாதிபதிக்கு தபாலட்டைகள் அனுப்பி வைப்பு



( சண்முகம் தவசீலன் )

இலங்கை கடல் எல்லைக்குள் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை உடனடியாக நிறுத்தக் கோரி கையெழுத்திடப்பட்ட தபாலட்டைகள் நேற்று ஜனாதிபதிக்கு முல்லைத்தீவு மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கார்த்திகை 21 சர்வதேச மீனவர் தினமாகிய நேற்று சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் (ECDO) ஏற்பாட்டில் இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்பிற்குள் வரவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரிய தபாலட்டைகள் (தொடர்ச்சி...) 02

## விகிதாசார தேர்தல் முறை தொடர வேண்டும்: முதல் அமர்வில் ஹக்கீம் கோரிக்கை



(சுப்ரமணியம் நிஷாந்தன்)

விகிதாசார தேர்தல் முறையின்ஊடாக சிறுபான்மை மக்களினதும், சிறிய கட்சிகளினதும் பிரதிநிதித்துவங்கள் பாதுகாக்கப்படுவதால் இத்தேர்தல் முறையை தொடர்ந்து கொண்டுசெல்ல வேண்டும் என்பதுடன், தேவையான சில மாற்றங்களை செய்ய வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நேற்று (தொடர்ச்சி..) 02

## கன்னி அமர்வில் சம்பிரதாயம் மீறிய மருத்துவர் அர்ச்சுனா

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா சபையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்படும் ஆசனத்தில் அமர்ந்திருந்தமை அனைவரதும் கவனத்தை ஈர்த்திருந்ததுடன், இவர் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை மீறியுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பத்தாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்று வியாழக்கிழமை (தொடர்ச்சி...) 02

## மன்னார் தாய்,சேய் மரணம் : விசாரணை அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மகற்பேறுக்காக சேர்க்கப்பட்டு மரணித்த இளம் தாயினதும் சிசுவினதும் மரணம் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கைகள் கிடைத்ததும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென சுகாதார (தொடர்ச்சி...) 02



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதலாவது நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது. கட்சியின் உறுப்பினர்களை படத்தில் காணலாம்.

## சிங்கப்பூர் - கொழும்பு விசேட விமான சேவை

சிங்கப்பூரில் இருந்து கொழும்புக்கு குறைந்த கட்டண விமான சேவையை ஜெட்ஸ்டார் ஏசியா நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதனடிப்படையில், நேற்றைய தினம்(21) உத்தியோபூர்வமாக தனது சேவையை ஆரம்பித்திருந்தது. ஒவ்வொருவாரமும் ஜெட்ஸ்டார் ஏசியா தனது ஏர்பஸ் யு320 (தொடர்ச்சி...) 02

## தேசிய ஒருமைப்பட்டை

நிச்சயமாக சம்பள உயர்வு வழங்கப்படும் என்பதுடன், அஸ்வெசும கொடுப்பனவும் அதிகரிக்கப்படும். பாடசாலை உபரண ங்க ணளை பெற்றுக்கொள்ள மாணவ–ர்களுக்கு ஜனவரி மாதம் விசேட கொடுப் பனவை வழங்கவும் அரசாங்கம் தீர்மானி த்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் சட்டத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ள மக்களை மீண்டும் சட்டத்தின் மீது நம்பிக்கை ஏற்படும் சூழலொன்று உருவவாக்கப்படும் என்பதுடன், “கிளீன் ஸ்ரீலங்கா“ **(Clean Sri Lanka)** திட்டத்தின் ஊடாக மக்களின் வாழ்கையை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

எரிசக்தி துறை, மீன்பிடித்துறை, உற்பத்தி துறை, விவசாயத்துறை, கணினி மற்றும் மென்பொருள் துறை, சுற்றுலாத்துறையை மையப்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தின் ஊடாக அரச வருமானத்தை அதிகரித் துக்கொள்வத–ற்கானதிட்டங்கள்வகுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பத்தாவது நாடாளுமன்றத்தில் முதலா–வது அமர்வு நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றதுடன், இதில் புதிய சபாநாயகர் தெரிவு உட்பட பல்வேறு பதவிகளுக்கான நியமனங்களும் இடம்பெற்றன. இதனை தொடர்ந்து இடம்பெற்ற புதிய அரசாங் கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தலில் ஆதரவளித்த, ஆதரவளிக் காத அனைவரையும் இலங்கை பிரஜைகள் என்றே நான் கருதுவேன். எமது நாட்டின் அரசியல் அதிகாரம் பல தசாப்தங்களாக இரண்டு பிரதான தரப்பினரிடையே மாறி மாறிகைமாற்றப்பட்டிருந்தது. கடந்தஜனாதி பதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் முதல் முறையாக மூன்றாவது தரப்பான எமக்கு அதிகாரம் கிடைக்கப்பெற்றது.

இந்த தேர்தல் முறையின் கீழ் அதிகமான ஆசனங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றது. இது போதுமான எண்ணிக்கையாகும். ஆனால், இந்த எண்ணிகண்கையை தாண்டி மக்களின் எதிர்ப்பார்ப்பு இதில் உள்ளது.

மக்களால் வெறுக்கப்படும் நாடாளு மன்றம் மக்களை ஆள்வதற்கு தகுதியற் றது. மக்களால் விமர்சிக்கப்படும் நாடாளும ன்றம் தோற்றம் பெற இடமளிக்க முடியாது. நாடாளுமன்றம் மக்களுடன் நெருக்கமாக செயற்பட வேண்டும். இந்த நாடாளுமன்றம் மக்களின் பரிசோதனையில் சித்தி பெற வேண்டும். ஜனாதிபதி உட்பட அனைவரும் நாட்டின் சட்டத்துக்கு அடிபணிய வேண்டும்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நாட்டின் அனைத்து மாகாண மக்களினதும் ஆணை எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த காலங்களில் மாகாண அடிப் படையில் அரசியல் முகாம்கள் உருவாகி யிருந்தன. சில சந்தர்ப்பங்களில் தேசியவாதம் மற்றும் பின்பற்றப்படும் மதங்களின் அடிப்படையில் முகாம்கள் உருவாகியிருந்தன. இந்த அரசியல் முகாம்களின் இறுதியான செயல்பாடாக பிளவுபட்ட மக்கள் உருவாகினர்.

ஒரு முகாமின் ஆயுதமாக இனவாதம் இருந்தால் மற்றைய முகாமும் அதனை நோக்கியே நகர்ந்திருக்கும். இனவாம் ஒரு இடத்தில் இருக்காது. ஓர் இனவாதம் மற்றுமொரு இனவாதத்தை வளப்படுத்தும். ஆனால், மக்கள் எம்மை நம்பி முதல் முறையாக இவற்றுக்கு எதிராக ஆணை வழங்கியுள்ளனர். மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்திருந்தாலும் பல்வேறு கருத்துடைய அரசியல் இயக்கங்கள் இருக்க வேண்டும். நாம் தனிக் கட்சி ஆட்சியை விரும்பவில்லை. பல கட்சிகள் பல கருத்துகள் இருக்க வேண்டும். இது ஜனநாயகத்தின் பிரதிபலிப்பாகும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற வகையில் தனியொரு கட்சி நாட்டை ஆள வேண்டும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. அனைத்து பிரஜைகளின் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு தாம் கடமைப்பட்டிருப்பதுடன், அதற்கு பொறுப்புக் கூறுவோம். மக்கள் தமது கடமையை நிறைவேற்றியுள்ளனர். இனி எமது கடமையை நிறைவேற்ற வேண்டியுள்ளது. சிறந்த மாற்றத்துக்கு அரசியல் கட்டமைப்பு மாற்றமடைவதைப் போன்று சமூக கட்டமைப்பும் மாற்றம் பெற வேண்டும்.

எமது நாட்டில் பல இனம், பல மதம் மற்றும் பல மொழிகளை பின்பற்றும் மக்கள் வாழ்கின்றனர். அனைவரும் ஒரே எதிர்ப்பார்ப்புக்காக ஒன்றிணைந்துள்ளதாக இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிகாட்டியுள்ளன. அதனால் இனி இந்த நாட்டில் இனவாதம் தலைத்தூ க்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். அனைவருக்கும் வெவ்வேறு வகையான கருத்துகள், எண்ணங்கள் இருக்கலாம். ஆனால், இனவாத அரசியலுக்கு மீண்டும் இடமில்லை. எந்தவொரு முறையிலும் மதவாதம் தலைத்தூக்கவும் இடமளிக்க மாட்டோம்.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவத ற்காக இனவாத, மதவாத, கோசங்களை கட்டியெழுப்ப முற்படும் எவருக்கும் இடமளிக்க மாட்டோம். மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்பான தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

போதுமான அளவு நாம் இனவாத மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களாகும். இந்த நாடு போதுமான அளவு இரத்தால் நனைந்துள்ளது. ஆறு கள் நிறையும் அளவுக்கு கண்ணீர் வடிந்து ள்ளது. ஒருவருக்கு ஒருவர் இடையிலான சந்தேகம், குரோதங்கள் இருந்துள்ளன. இந்த நாடாளுமன்றத்தின் பிரதான கடமைதான் எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த நாட்டை கையளிக்க வேண்டியது. இந்த நாட்டில் நீண்டகாலமாக நிலவும் அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்பதும் மக்கள் வழங்கியுள்ள ஆணை யின் பிரதான கூறாகும்.

ஒவ்வொரு பிரஜையும் அவரவர் மதம், கலாசாரம் மற்றும் மொழியின் அடிப்ப டையில் தனிமைப்படுத்தப்படக் கூடாது. அரசியல் மாற்றங்கள் இருக்கலாம். வெவ்வேறு இனங்களாக இருக்கலாம், வெவ்வேறு மதங்களை பின்பற்றலாம். வெவ்வேறு அரசியல் கொள்கைகள் இருக்கலாம். ஆனால், சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது. எனவே, அனைவருக்கும் அச்சம் மற்றும் சந்தேகம் இல்லாத சுதந்திர ஜனநாயக அரசை உருவாக்குவது நமது பொறுப்பாகும். அதை நாங்கள் உருவாக்குவோம்.

வலுவான அரச சேவையின்றி ஒரு நாடு ஒருபோதும் முன்னோக்கி செல்ல முடியாது. அரச சேவையை வினைத்திறன் மிக்கதாகவும் செயல் திறன் மிக்கதாகவும் மாற்ற வேண்டும். அரச ஊழியர்களில் பெரும்பான்மையானவர்கள் எமக்கே வாக்களித்தனர். அதனால் அவர்களும் இதனையே விரும்புகின்றனர். மக்களின் நலனுக்காகச் செயற்படும் சேவையாக அரச வேவை நாட்டில் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும்.

சட்டத்தின் மீது மக்கள் வைத்தி ருந்த நம்பிக்கையை உடைத் தெறியப் பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கு மீது பொதுமக் களின் நம்பிக்கை தகர்ந்து விட்டது. மீண்டும் சட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையை கட்டியெழுப்ப சட்டம் அமுல்படுத்தப்படுவதை மக்கள் உணர வேண்டும். இதற்குப் பிறகு யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. அனைவரும் சட்டத்தை கடைபிடிக்க வேண்டும். சட்டத்தின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். நாட்டில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய குற்றங்களை முறையாக விசாரணைசெய்துபாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுப்போம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் ஒப்பந்தம் எதிர்வரும் 22ஆம் திகதி கைச்சாத்திடப்பட உள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னோக்கி செல்லும் பயணத்தில் இது மிகவும் முக்கியமான படியாகும். இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழுவுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இந்த ஒப்பந்தம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் மறுசீரமைக்க முடியாது. அதற்கு நீண்டகாலம் எடுக்கும். அதனால் இதில் சில மாற்றங்களை மேற்கொண்டே பயணிக்க வேண்டும் என்பது யதார்த்தம்.

கடமையாக வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரமொன்றையே நாம் பொறு ப்பேற்றுள்ளோம். அதனை முழுமையாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. பொருளாதார ரீதியான தீர்மானங்களை எடுக்கும் போது அனைத்து பக்கங்களிலும் இருந்து சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். இந்த பொருளாதாரம் தவறு செய்ய எங்களுக்கு வாய்ப்பளிக்கவில்லை. தவறு செய்தால் இன்னமும் பாரதூரமான நிலைக்குள் செல்லும். அதனால் ஒவ்வொரு நுட்பமான இடத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கூட்டுறவு வலையமைப்பை மீண்டும் பலப்படுத்த உள்ளோம்.

புதியபொருளாதாரமூலோபாயத்திற்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் விரைவான வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் அவசியம் அதற்கு அவசியம் என்பதுடன், பொருளாதாரத்தில் மக்களை ஈடுபடுத்த வேண்டும். போட்டிமிக்க சந்தையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன், எரி

## சிங்கப்பூர்....

விமானங்களைப் பயன்படுத்தி ஐந்து இருவழிச் சேவைகளை மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன், இரண்டு இடங்களுக்கும் இடையிலான பயணத்துக்காக 90,000 ரூபாய்க்கும் குறைந்த கட்டணம் அறவிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், ஜெட்ஸ்டார் ஏசியா சிங்கப்பூரிலிருந்து கொழும்புக்கு ஒரு வழி கட்டணமாக 149 டொலர்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், கிளப் ஜெட்ஸ்டார் உறுப்பினர்களுக்கு 139 டொலர்களுக்கும் குறைவான கட்டணங்கள் அறிவிடப்படவுள்ளன.

நேற்றைய தினம் வந்திறங்கிய குறித்த விமானத்தில் 179 பயணிகளுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு 10.30 மணிக்கு வந்தடைந்தது. குறித்த பயணிகளுக்கு இலங்கை தேயிலை சபையின் அனுசரனையுடன் தேநீர் பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டமையும் விசேட அம்சமாகும்.

## டக்ளஸ்...

டக்ளஸ் தேவானந்தா அளித்த முறைப்பாட்டின் பிரகாரம், டக்ளஸ் தேவானந்தா நீதிமன்றத்தில் முன்னிலையாகாமையால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவிலிருந்து...

முல்லைத்தீவு மக்கள், முல்லைத்தீவு மீனவர்களினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதுமாக விஷே டமாக முல்லைத்தீவு மாவட்டம் இந்திய மீனவர்களுடைய இழுவை படகுகளினுடைய அத்துமீறல்களும், முல்லைத்தீவு கடற்பரப்பில் காணப்படுகின்ற கடற் திரவியங்கள் அனைத்தும் இந்திய இழுவை படகுகள் மூலமாக அபகரித்து செல்லுகின்ற துர்ப்பாக்கிய நிலை அதிகமாக காணப்படுகின்றது.

500 ற்கும் மேற்பட்ட தபாலட்டைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்திய இழுவைப் படகுகளை இலங்கை கடற்பரப்பிற்குள் வரவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கோரியே குறித்த தபாலட்டைகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கொடிகாமத்தில்...

பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சுடர் ஏற்றி மலர் தூவி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

மேலும் யாழ். தீவகம் – சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி, உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை மாவீரர் வாரத்தின் முதல் நாளான இன்று விசுவமடுவில் உள்ள தேராவில் மாவீரர் துயிலுமில்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

## கன்னி அமர்வில்...

இடம்பெற்றது. முதல் அமர்வில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எந்தவொரு ஆசனத்திலும் அமரலாம் என நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் நேற்றைய தினம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு ஆசனங்களில் அர்ந்திருந்தனர். ஆளுங்கட்சியின் பதவி நிலைகளுக்கு ஏற்கனவே சிலர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததால் அவர்கள் உரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில், நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னரே சபைக்கு வந்திருந்த யாழ்.மாவட்ட எம். ரி வைத்தியர் அர்ச்சுனா எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்படும் ஆசனத்தில் அமர்ந்திருந்தார். எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றம் கூடிய பின்னரே தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும், கடந்த காலங்களில் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவுசெய்யப்படக் கூடியவராக மக்கள் ஆணையை பெற்றவர் உரிய ஆசனத்தில் அமர்ந்திருப்பார்.

எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்திருந்த வைத்தியர் அர்ச்சுனாவிடம் அவருக்கு அருகில் இருந்த ரஞ்சித் மத்தும பண்டார உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இது எதிர்க்கட்சி தலைவர்களுக்கு ஒதுக்கப்படும் ஆசனம். அதனால் வேறு ஆசனத்தில் அமருங்கள் எனக் கூறியுள்ளனர்.

அதற்கு, எதிர்க்கட்சித் தலைவரது ஆசனம் என இதில் எங்காது குறிப்பிடப்பட்டுள்ளதா இன்றைய தினம் எந்தவொரு ஆசனத்திலும் அமரலாம் என அர்ச்சுனா எம்.பி பதிலளித்துள்ளார். அருகில் இருந்த படைக்கள சோவிதர்கள் உடனடியாக குறித்த இடத்துக்கு விரைந்து, இது எதிர்க்கட்சித் தலைவரது ஆசனம், நீங்கள் வேறு இடத்தில் அமருங்கள் எனக் கூறியுள்ளனர். என்றாலும், அதற்கும் அவர் மறுப்பு வெளியிட்டிருந்தார்.

இதனால் நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகிய போது சபைக்குள் வந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அர்ச்சுனா எம்.பி, அமர்ந்திருந்த ஆசனத்துக்கு அருமைகாமையில் இருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரைக்காக நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11.30 மணிக்கு கூடியபோதும் அர்ச்சுனா எம்.பி எதிர்கட்சித்தலைவரின் ஆசனத்திலேயே அமர்ந்திருந்தார். அப்போது அவரிடம் வந்த படைக்கல சேவிதர் அது எதிர்கட்சித்தலைவரின் ஆசனம் என்று கூறியபோதும் அவர்களுடன் முரண்பட்டு ஆசனத்திலிருந்து செல்வதற்கு மறுத்துவிட்டார்.

## சர்வதேச...

நாணய நிதியம் கடனாக வழங்க உள்ளது. இதற்கான இவ்வாண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி மூன்றாம் கட்டமாக இலங்கைக்கு வழங்கப்பட்ட 336 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொடர்பான மதிப்பாய்வுகளை மேற்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழுவொன்று கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்தது.

இந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்ட உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.இந்த கலந்துரையாடலின் எட்டப்பட்ட உடன்பாடுகளின் பிரகாரமே பணியாளர் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையில் கூறியதாவது, ”சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்துடன் பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (இன்று) கைச்சாத்திடப்படும்.

இரு தரப்பு கடன் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. பிரதான கடன் வழங்குநர் நாடுகளுடன் பிரத்தியேக ஒப்பந்தம் வெகுவிரைவில் கைச்சாத்திடப்படும். நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை இந்த ஆண்டுக்குள் பூரணப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.” என்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் நீட்டிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் 2.9 பில்லியன் டொலரை கடந்த 2022ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் கோரியது. அதன் பிரகாரம் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

## சி.ஐ.டி.யில்...

கெஹெலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரத தின் அங்கீகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே இவர்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இன்று (22) குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஆஜராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சபையில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் அப்போது அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 18 அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த 11ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றில் காரணிகளை முன்வைத்த அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, போலியாக மருந்துகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் கூறி, முன்னாள் சுகாதார அமைச்சர் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 182 வகையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தபோது, அமைச்சரவையில் 18 பேர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

குறித்த அமைச்சரவைப் பத்திரத்தில் எவ்வாறான மருந்துகள் தேவை என்பது குறிப்பிடப்படாததன் பின்னணியில், உண்மையில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதா அல்லது அமைச்சரவை பத்திரத்திற்கு விசாரணையின்றி எவ்வாறு அங்கீகாரம் வழங்கியது என்பதற்கான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்குவது தொடர்பான வாக்குமூலங்களை வழங்குவதற்காக, முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, பிரசன்ன ரணதுங்க மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோரை வியாழக்கிழமை (21) காலை 10 மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட புலனாய்வு பிரிவு 01 இல் ஆஜராகுமாறு புலனாய்வு அதிகாரிகள் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார்...

அமைச்சு தெரிவித்துள்ளது

மன்னார் பட்டித்தோட்டத்தைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் வனஜா என அழைக்கப்படும் ஜெ. ராஜஸ்ரீ (வயது 28) என்பவரை திங்கள் கிழமை (18) அதிகாலை மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேறுக்காக சேர்த்திருந்த நிலையில் செவ்வாய் கிழமை (19) மாலை பிரசவம் நடைபெற்றபோது சிசுவும் தாயும் இறந்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் கவனயீனமே இந்த மரணங்களுக்கு காரணமென கூறி பொதுமக்கள் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையிட்டு வைத்தியசாலையில் கடும் பாதுகாப்பு ஏற்படுத்தப்படிருந்தது. அப்படியிருந்தும் சடலங்கள் இரண்டும் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில்,புதன் கிழமை (20) மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை மக்கள் ஒன்று திரண்டு ஒரிரு கோரிக்கைகளை முன்வைத்து இறப்புக்கு நீதிகோரி கடும் போராட்டத்தில் இறங்கியிருந்தனர்.

இதற்கிடையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெற்றபின் இக் குழுவினர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து இங்கும் பங்கு தந்தையர் . சிவில் பொது அமைப்பினர் . இறந்தவரின் தாயார் , உறவினர்கள் , சட்டத்தரணிகள் மற்றும் அதிகாரிகளுடனும் கருத்தாடல் இடம்பெற்றது.

இதில் வனஜா என்ற தாயினதும் சிசிவினதும் மரணம் அடைந்தமை தொடர்பாக பூரண விசாரனை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு குழுக்கள் மன்னார் வருகை தந்து பூர்வாங்க விசாரனையை புதன்கிழமையே (20) நிறைவு செய்துள்ளதாகவும் இவர்கள் வியாழக்கிழமை (21) சுகாதார அமைச்சின் செயலாளருக்கு தம்முடைய அறிக்கையினை கையளிக்க இருப்தாக எனவும்,

இதனைவிட வடக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளரினால் அமைக்கப்பட்ட மூன்றுபேர் கொண்ட குழுவினரும் மூன்று தினங்களுக்குள் தங்கள் அறிக்கையை சமர்பிக்க இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூன்று குழுக்களினாலும் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி பெற்ற பின்பு இனம் காணப்படுகின்ற குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் எழுத்து மூலமாகவும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்பொழுது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையினால் வழங்கப்பட்டு வரும் சுகாதார சேவையினை தொடர்ந்து எவ்விதடங்கலும் இன்றி தொடர்ந்து நடைபெறுவதற்கான முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விகிதாசார...

வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்ட அசோக ரன்வலவுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது மேலும்கருத்துவெளியிட்டஅவர், விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது 12 சதவீத வாக்குகளை பெற்றாலே நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பெற முடியும் என்ற நிலைமை காணப்பட்டது. இதனால் சிறுபான்மை மக்கள் மற்றும் சிறிய கட்சிகளால் பிரதிநிதித்துவங்களை பெற முடியாத நிலைமை காணப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவிடம் கோரிக்கை விடுத்து இந்தச் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டார். அதன் பிரகாரம் 5 சதவீத வாக்குகளை பெற்றுக்கொள்ளும் கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைக்கப்பெற்றது.இந்த மாற்றத்தால்தான் 1994ஆம் ஆண்டு சிறிய கட்சியாக இருந்த ஜே.வி.பியிலிருந்து ஒருவர் நாடாளுமன்றத்தக்கு தெரிவானார். அம்பாந்தோட்டையிலிருந்து அன்று நிஹால் கலபத்தி நாடாளுமன்ற உறுப்பின ராக தெரிவாகி வந்தபோது நானும் முதல் முறையாக நாடாளுமன்றத் துக்கு வந்திருந்தேன். அதனால் விகிதாசார தேர்தல் முறையை தொடர்ந்து கொண்டு செல்வதன் ஊடாக ஏனைய சிறுபான்மை இனங்கள் மற்றும் கட்சிகளுக்கு உறுப்புரிமை கிடைக்கும் என எதிர்பாக்கிறோம். ” என்றார்.

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அழிவுக்கு மஹிந்தவும் மைத்திரியுமே காரணம்

## முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முழு அழிவுக்கான பொறுப்பை மஹிந்த ராஜபக்ஷவும் மைத்திரிபால சிறிசேனவும் ஏற்க வேண்டும். இவர்கள் இருவருமே இந்தக் கட்சியை முற்றாக அழித்தார்கள் என முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வைத்து நேற்று (20) ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது,

வீழ்ச்சியடைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நேர்மையான நோக்கத்துடனேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன்.

கட்சித்தாவலை மேற்கொண்ட இரு பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் அரசியல் கட்சிகளை மட்டுமல்லாது



நாட்டையே அழித்தார்கள். நாடு வங்குரோத்தானது. கடந்த இரண்டு வருடங்களில் பாரிய அர்ப்பணிப்பை செய்து நாட்டை தற்போது இருக்கும் நிலைக்குக் கொண்டு வந்தோம் என தெரிவித்த அவர், கடந்த தேர்தல் நேரத்தில் மக்களுக்கு வேறு வழியில்லாததால் வரலாற்றில் முதன்முறையாக ஒரு அரசியல் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்ற ஆசனங்களை வழங்கினர் எனவும் தெரிவித்தார். மக்கள் விடுதலை முன்னணியைத்தவிர இந்த நாட்டில் வேறு எந்தக் கட்சிக்கும் அல்லது தலைவருக்கும் கொள்கை கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிறைவேற்று ஜனாதிபதி பதவி உருவாக்கப்பட்ட பின்னர், அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட தலைவர்கள் அவர்களது அரசியல் கட்சியின் தலைவர் ஆனார்கள். ஜனாதிபதி பிரேமதாசவிற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த தலைவர்கள் எவரும் தமது கட்சியின் இரண்டாம் நிலையினரைத் தலைதூக்க இடமளிக்காமல் அவர்களை அடக்கியாண்டனர், சிலர் கொல்லப்பட்டனர் எனவும் குறிப்பிட்டார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 07ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் அணுகுமுறை.

**ரிஷபம்** உடல் நலம் காக்க தியானமும் யோகாவும் அவசியம்.

**மிதுனம்** இன்றைக்கு எல்லோருமே உங்களுக்கு நண்பராக இருக்க விரும்புவார்கள்.

**கடகம்** சிலருக்கு பயண அலைச்சல், மன அழுத்தம் ஏற்படுத்துவதாகவும் இருக்கும்

**சிம்மம்** எதிர்பாராத பில்கள் உங்கள் நிதிச், குடும்பத்தில் பிரச்சினையை அதிகரிக்கும்.

**கன்னி** ஆன்மிக மற்றும் உடலியல் பயன்களுக்காக தியானமும் யோகாவும் செய்ய வேண்டும்.

**துலாம்** நீண்டகால நோயில் இருந்து விடுபடுவீர்கள், பணம் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்,

**விருட்சிகம்** உறவினர்கள், நண்பர்களிடம் இருந்து எதிர்பாராத பரிசுகளும் அன்பளிப்புகளும் வரும்

**தனுசு** அனைத்து வாக்குறுதிகளும் நிதி பரிவர்த்தனைகளும் கவனமாக கையாளப்பட வேண்டும்.

**மகரம்** ரியல் எஸ்டேட் மற்றும் பண பரிவர்த்தனைகளுக்கு நல்ல நாள்.

**கும்பம்** இன்று, உங்கள் வணிகத்திற்கு புதிய உயரங்களை நீங்கள் எட்டக்கூடும்.

**மீனம்** இன்று உங்களால் எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாது,

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சப்தமி திதி இரவு 10:30,அதன் பிறகு அஷ்டமி திதி.

**நட்சத்திரம்:** ஆயில்யம் நட்சத்திரம் இரவு 09:51, அதன் பிறகு மகம் நட்சத்திரம்.

**யோகம்:** மரண யோகம்.

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** மூலம், பூராடம்.

**இராகு காலம்:** காலை 10:30 யுஆ முதல் 12:00 ஆ வரை.

**குளிகை:** காலை07:30 யுஆ முதல் 09:00 யுஆ வரை.

**எமகண்டம்:** மதியம் 03:00 ஆ முதல் 04:30, வரை.

### சீனத் தூதுவர் மட்டு விஜயம்:

# சிவில் சமூகத்தினருக்கும் இடையில் சந்திப்பு

(வெல்லாவெளி நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கியு சென்கொங்,மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தினருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று புதன்கிழமை மாலை(20.11.2024) மட்டக்களப்பு பாசிக்குடாவில் உள்ள சுற்றுலா விடுதியில் ஒன்றில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், மேலும் பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் எஸ்.மாமாங்கராஜா தலைமையில் தூதுவரை சந்தித்த குழுவினர் மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை, உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம் முன்வைத்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு சீனாவில் ஊடகத்துறைசார்ந்து புதிய தொழில் நுட்ப பயிற்சியைப் பெற்றுக் கொடுக்குமாறு சிவில் சமூகத்தினர் தூதுவரிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதற்கு பதிலளித்த தூதுவர் இது மிகவும் வரவேற்கத்தக்க விடையம் .இதனை தான் முன்னின்று செய்த தருவதாக உறுதியளித்துள்ளார்.

இதில் நீண்டகால மற்றும் குறுகிய கால திட்டங்கள் என பல அடங்குவதுடன், கல்வித்துறை, மருத்துவதுறை, தொழிற்துறை, தொழிற்பயிற்சி வழங்குதல், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் வாழ்வாதாரம் அபிவிருத்தி, மாணவர்கள் பாடசாலை இடைவிலகள், யுத்தத்தால் பாதிக்கப்பட்டு விசேட தேவையுடைய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடுகள் தொடர்பான பல விடயங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதன் போது சீனத்தூதுவர் தற்போது இலங்கைக்கு 1.5 பில்லியன் நிதி வழங்கியுள்ளதுடன் கொவிற் தொற்று பாதிப்புற்றிருந்த காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்கு தேவையான தடுப்பு ஊசி மருத்துகளை வழங்கியதாகவும், கிழக்குப் பல்கலைக் கழத்திற்கு பல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதையும், பொருளாதார விழ்ச்சி ஏற்பட்ட போது கிழக்கு மாகாண மக்களுக்கான உலர் உணவுகள் வழங்கப்பட்டதையும், அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை சீருடை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொண்டதாகவும் இதன் போது தூதுவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் சீன தூதரக அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட மேலும் பலர் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவங்கேணி பிரதேசத்தில் சீன அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை சீன தூதுவரினால் வியாழக்கிழமை(21.11.2024) திகதி கையளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யால தேசிய வனத்தில் 3 ஏக்கர் கஞ்சா தோட்டம்

### உள்நாட்டுத் துப்பாக்கியுடன் மூவர் கைது



இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய தகவலுக்கமைய யால தேசிய வனத்தின் கோனகங்கார பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் பயிரிடப்பட்ட மூன்று கஞ்சா தோட்டங்களை சுற்றிவளைத்த காவந்திஸ்ஸபுர விசேட அதிரடிப் படை அதிகாரிகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்களுடன் 3 நபர்களைக் கைது செய்தனர். இந்த கஞ்சா தோட்டமானது யால தேசிய வனத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சட்டவிரோதமாக பயிரிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இத்தோட்டத்தில் சுமார் 190,000 கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. 36, 30 மற்றும் 27 வயதுடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கோனகங்கார பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதானையில் அரச நாடக விழா 2024

அரச நாடக விழா 2024 இம்மாதம் 18ஆம் திகதியிலிருந்து மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் நாடக கலைஞரான செல்வராஜ் லீலாவதியின் “வெளிச்சமே“ குறுந்நாடகம் மாலை 4.30 மணிக்கும், இராசையா லோகாநந்தனின் “லயத்து கோழிகள்“ எனும் நெடும் நாடகம் மாலை 6.00 மணிக்கும் காண்பிக்கப்படவுள்ளது.

இலங்கையில் தேசிய விருதுகளை வென்ற மு.அஜந்தன், செ.லீலாவதி,இரா.லோகாநந்தன், மு.நவநீதன், ச.கலையரசி, ந.ஸ்டெலா, சு.வசீகரன், பெ.ஜிம்கென்னடி ஆகியோரும் இந்த நாடகத்தில் பங்கேற்றுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077-8317686 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# 29 பிரதி அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 29 பிரதி அமைச்சர்கள் நேற்று (21) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதில் இரத்தினபுரி மாவட்டத்தில் வெற்றிபெற்ற சுந்தரலிங்கம் பிரதீப் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராகவும் மொஹமட் முனீர் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

01 பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ – பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

02 நாமல் கருணாரத்ன – விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர்

03 வசந்த பியதிஸ்ஸ –கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

04 நலின் ஹெவகே – தொழிற்கல்வி பிரதி அமைச்சர்

05 ஆர். எம். ஜயவர்தன – வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

06 கமகெதர திசாநாயக்க –புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

07 டி. பீ.சரத் – வீடமைப்பு பிரதி அமைச்சர்

08 ரத்ன கமகே – கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர்

09 மஹிந்த ஜயசிங்க – தொழில் பிரதி அமைச்சர்

10 அருண ஜயசேகர – பாதுகாப்பு பிரதி அமைச்சர்

11 அருண் ஹேமச்சந்திர – வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

12 அண்டன் ஜெயக்கொடி – சுற்றாடல் பிரதி அமைச்சர்

13 மொஹமட் முனீர் – தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

14 பொறியியலாளர் எரங்க வீரரத்ன – டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

15 எரங்க குணசேகர – இளைஞர் விவகார பிரதி அமைச்சர்

16 சதுரங்க அபேசிங்க – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்

17 பொறியியலாளர் ஜனித் ருவன் கொடித்துவக்கு – துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

18 நாமல் சுதர்சன –பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்

19 ருவன் செனரத் –மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

20 கலாநிதி பிரசன்ன குமார குணசேன – போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

21 டொக்டர் ஹன்சக விஜேமுனி – சுகாதார மற்றும் ஊடக பிரதி அமைச்சர்

22 உபாலி சமரசிங்க – கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

23 ருவன் சமிந்த ரணசிங்க – சுற்றுலா பிரதி அமைச்சர்

24 சுகத் திலகரத்ன –விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

25 சுந்தரலிங்கம் பிரதீப் – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்

26 சட்டத்தரணி சுனில் வட்டகல –பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர்

27 கலாநிதி மதுர செனவிரத்ன – கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்

28 கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும –நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர்

29 கலாநிதி சுசில் ரணசிங்க –காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

# குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு சென்ற முன்னாள் அமைச்சர்கள்

முன்னாள் அமைச்சர்களான ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, பிரசன்ன ரணதுங்க ஆகியோர் வியாழக்கிழமை (21) காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்குச் சென்றனர். தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே இவர்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ வெள்ளிக்கிழமை (22) குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஆஜராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சபையில் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தின் அங்கீகாரம் தொடர்பில் அப்போது அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 18 அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கடந்த 11ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றில் காரணிகளை முன்வைத்த அரசாங்கத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, போலியாக மருந்துகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாகக் கூறி, முன்னாள் சுகாதார அமைச்சர் 2022ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் திகதி இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் 182 வகையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தபோது, அமைச்சரவையில் 18 பேர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## கொள்கை விளக்கவுரை சொன்னதும் சொல்லாதும்

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத்திற்கான முதலாவது கூட்டுத்தொடரில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா நிகழ்த்திய கொள்கை விளக்க உரை முன்னைய ஜனாதிபதிகள் நிகழ்த்தும் கொள்கை விளக்கவுரையில் இருந்து மாறுபட்டதாகக் கூற முடியாது.

எதிர்பார்ப்புகள் - மாற்றங்கள் என்று மார் தட்டியிருந்த நிலையில் சமத்துவம் மற்றும் இன ரீதியான அரசியலுக்கு முற்புள்ளி என்ற அநுரவின் கூற்றில் கேள்விகளே விஞ்சியிருந்தன. இன ரீதியான அரசியலுக்கு முற்றுப் புள்ளி என்ற வாசகம் 1994 ஆம் ஆண்டு மிகப் பெரும் ஆர்ப்பரிப்புடன் ஜனாதிபதியாகப் பதவியேற்றிருந்த சந்திரிக்கா கூறியதுதான்.

இம்முறை நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டுத் தொடர் மிக எளிமையாக இடம்பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும். மரபு வழி சடங்குகள் சம்பிரதாயங்கள் எதுவுமின்றி முப்படைகளின் பாதுகாப்பு இல்லாமலும் ஜனாதிபதி அநுரகுமார நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார்.

வெறும் 3 வீதம் மாத்திரமே காணப்பட்ட கட்சித் தலைவர் ஒருவர் பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்திருக்கிறார்.

இது தேர்தல் ஒன்றில் மக்கள் வாக்குகளுக்கான பெறுமதியை காண்பிக்கிறது. மக்கள் நினைத்தால் ஆண்டாண்டு காலமாக ஆட்சி செய்து வந்த ஊழலாட்சியை விரட்டவும் முடியும், புதிய மாற்றங்களுக்கு இடமளிக்கவும் முடியும் என்பது இம்முறை தேர்தல் முடிவுகளின்படி, தெளிவாகியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் நேற்று இடம்பெற்ற முதலாவது நாடாளுமன்ற கூட்டுத்தொடரில் ஜனாதிபதியின் கொள்கை உரை தொடர்பில் பல எதிர்ப்பார்ப்புகளும், அவதானங்களும் காணப்பட்டன.

உள்நாட்டில் மாத்திரமன்றி, உலகளாவிய ரீதியிலும் கூட புதிய ஜனாதிபதியின் நாடாளுமன்ற கொள்கை உரை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

சுமார் ஒரு மணித்தியாலங்கள் ஆற்றப்பட்ட ஜனாதிபதியின் கொள்கை உரையில் பல முக்கிய விடயங்கள் பேசப்பட்டன. ஆனால் தமிழர்களின் பார்வையில் அந்த உரையில் எதுவுமில்லை என்ற தொனியும் உண்டு.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் மேடைகளில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நடைமுறைக்கு உட்படுத்துவதன் மூலம் எதிர்கொள்ளவுள்ள சவால்கள் ஜனாதிபதி மற்றும் பெரும்பான்மை அரசாங்கம் எனும் ரீதியில் அவற்றை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றிய ஒரு உரையாக அது அமைந்தது.

அதேநேரம் மீனவர் பிரச்சினை பற்றித் தனது உரையில் பிரஸ்தாபித்த அநுர வடக்குக் கிழக்கு கடற்பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் ஊடுருவுகின்ற விவகாரங்களுக்கான தீர்வுகள் எதனையும் முன்வைக்கவில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் மேற்கொள்ளப்பட்ட உரையில் "சட்டம்" பற்றி கூறிய சில விடயங்கள் சற்று ஆழமாக சிந்திக்க வைத்துள்ளது. ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் சட்டங்களினால் அதிகளவு பாதிக்கப்படுவது தமிழர்கள்தான். இதற்கு முஸ்லிம் சமூகமும் விதிவிலக்கல்ல.

"நாட்டில் யாரும் நீதிக்கு மேன்மையானவர்களாக இருக்க மாட்டார்கள், சட்டம் அனைவருக்கும் சமமானது" என்பதை அநுர சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆகவே இக் கூற்றின் பிரகாரம் வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் அநுர அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள செயற்பாடுகளில் சட்டச் சமநிலை ஏற்பட வேண்டும்.

சட்டம் அனைவருக்கும் சமம் அதுதான் உண்மையும் கூட. அதேநேரம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள், குற்றச்செயல்கள் இவை அனைத்துக்கும் நிச்சயமாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

அவை தவிர, நாடாளுமன்றத்தில் நடத்த பல மோசமான செயற்பாடுகள் அதனையும் ஜனாதிபதி உதாரணமாக காண்பித்திருக்கலாம்.

வெறும் 52 நாள் அரசாங்கத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள், சபாநாயகரின் கதிரை உடைக்கப்பட்டு மிளகாய் தூள் வீசப்பட்டு பல அசம்பாவிதங்கள் அரங்கேறின. இதனால் மக்களுக்கு நாடாளுமன்றம் மீது நம்பிக்கை இழக்கப்பட்டது.

தமிழர்களுக்கு இலங்கை நாடாளுமன்றத்தின் மீது ஏற்கனவே நம்பிக்கையிழந்து விட்டது. இப்போது சிங்கள மக்களுக்கும் நம்பிக்கையீனங்கள் மேலோங்கியிருந்த பின்னணயில்தான் அநுர தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றிருக்கிறது.

இலங்கையின் சட்ட விதிகளின்படி, அன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களும் கூட தண்டனை வழங்க வேண்டிய குற்றச் செயல்களாகும்.

எனினும், இதுவரையில் அவை தொடர்பில் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அதன்பின்னர் ஆட்சி பீடமேறிய அனைவரும், குற்றவாளிகளை காப்பாற்றவே திட்மிட்டனர்.

நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை முறைகேடாகப் பயன்படுத்தி மக்கள் சொத்தைத் சேதமாக்கிய ஒரு நாடாளுமன்றத்தை சுத்திகரித்தே மக்கள் இன்று புதியவர்களை ஆட்சிக்கு அனுப்பியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் நாளாந்த செயற்பாடுகள் பொதுமக்களுக்கு அறியப்படுத்தப்படும் எனத் தெரிவிப்பது மாத்திரமல்ல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கடந்த கால குற்றச்செயல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.


ஆகவே, சட்டத்தின் முன் அனைவரும் சமமே எனக்கூறும் ஜனாதிபதி, நாடாளுமன்றத்துக்குள் இடம்பெற்ற அடிதடி, ரகளைகள் தொடர்பில் பேசாதது ஏன் என்றொரு கேள்வி எழுகிறது.

அநுரவின் உரையில் நாட்டின் பொருளாதாரம் பற்றி பேசப்பட்டது. பொருளாதாரத்தில் பரிசீலனை மேற்கொள்ள இது உகந்த நேரம் அல்ல என அவர் ஒப்புக்கொண்டமையும் பொருளாதார ஸ்திரதன்மைக்கு அவர் வழங்கிய வழிகாட்டல்களும், யோசனைகளும் பரிசீலனைக்குரியது.

அதேநேரம் அநுரவின் உரையின் பல இடங்களில் தேசிய மக்கள் சக்தியின் கட்சித் தலைவர என்ற தொனியும் வெளிப்பட்டிருந்தது. குறிப்பாக இலங்கைத்தீவின் ஜனாதிபதி என்பதற்கு அப்பால் அவருடைய தொனி கட்சித் தலைவர் எனும் ரீதியில் காணப்பட்டதை உணர முடிந்தது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்று அதிக ஆசனங்களை கைப்பற்றியமையால் அவ்வாறான ஒரு தொனி அவருடைய உரையில் இருந்திருக்கலாம் எனினும், அண்ணளவாக 56 இலட்சம் மக்கள் வாக்களித்து நாட்டுக்கு ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளனர்.

ஆகவே, நாட்டின் தலைவராகவும் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் உரை அமைந்திருக்க வேண்டும்.



## பக்தர்களின் மனங்களில் நிலைத்து நிற்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

**நாளை 23ம் திகதி பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 99வது ஜனன தினம் அனுஷ்டிப்பு**

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையத்தின் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பாபாவின் பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் பல நிகழ்வுகளும் நடைப்பெறவுள்ளன ..

எத்தனையோ அவதாரங்கள் மனிதர்களாகத் தோன்றி மறைந்தாலும். அதில் ஒரு சிலர்தான் ராமனாகவும் கிருஷ்ணணாகவும் பக்தர்களின் இதயங்களில் நிலைத்து நிற்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அந்த அவதாரங்கள் மானிடசேவையாக சாதனைகள் புரிந்துவிட்டால், அவர்களை தெய்வத்துக்கு ஈடாக வணங்குவதுண்டு. அதைத்தான் மனிதனும் தெய்வமாகலாம் என்பார்கள். அப்படிப்பட்ட மகான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் புகழும். அவரது சாதனைகளும் இன்றும் பேசப்படுகிறது.

அவதார சித்தர்கள் தெய்வங்களில் வாழுகின்ற உருவங்கள். நம்முடைய உடலை ஆத்மாவோடு ஒன்றிடச் செய்ய, அவர்கள் ஒரு மனித உருவை எடுத்து வருகிறார்கள். இவர்கள் இந்த உடல் ஆத்மாவை உணரக் காரணமாக இருக்கிறார்கள். சிலர் சித்தர்களை கடவுளின் தூதுவர்கள் என்பார்கள். ஆனால் அவர்கள் தெய்வங்களின் அவதாரங்கள் என்பதை அறிவதில்லை. பகவான் கிருஷ்ணர் "மகான்கள் இறைவனின் வாழும் உருவங்கள்" என்று எடுத்துக் கூறியுள்ளார். "ஒரு தம்ளர் தண்ணீருக்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் அதையே பத்து தம்ளர் பாலுடன் சேர்த்து விட்டால் அதற்கு மதிப்பு வந்துவிடுகிறது. அது பாலாகவே கருதப்படுகிறது. அதற்கு மாறாக ஒரு தம்ளர் பாலை பத்து தம்ளர் தண்ணீரில் விட்டுவிடுங்கள். அதற்கு உள்ள மதிப்பும் போய்விடுகிறது. 'பாலா இது? வெறும் தண்ணீர் ' என்று இகழ்ந்து அதைத் தூரக் கொட்டிவிடுவார்கள். ஆகவே, நாம் நாடும் சாயி சத்சங்கம் நம்மைவிட உயர்ந்ததாக உண்மையான சத்சங்கமாக அமையவேண்டும்." இப்படிக் கூறியவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. இந்த உவமையானது மிகவும் உண்மையானது , அதிலும் இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் தேவையானது.


பகவானின் பக்தி பஜனைக்கும் சாயி சேவைக்கும் கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் முதலிடம் கொடுத்து வருவது, அதாவது, சாயி சேவை என்ற ரீதியில் கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையமானது வைத்தியசாலைகளுக்கும், பாடசாலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. இந்த இரண்டு இடங்களில் தான், இன மத மொழி பேதமற்ற மக்களைக் காணமுடியும். இங்கு செய்யப்படும் சேவைகள், பகவானின் சர்வமத, சகோதரத்துவத்தை ஏற்படுத்தும். அதனால்தான் யாழ் பூனகரி வைத்தியசாலைக்கு வழங்கிய தண்ணீர் திட்டம், வத்தளை, ஹெந்தலை, கந்தானை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய சத்திர சிகிச்சை நாற்காலிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டில்கள், கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், மருத்துவ உபகரணங்கள், வருடாவருடம் இடம்பெறும் இரத்ததானம், மூக்குகண்ணாடி வழங்குதல், சாயி நிலையத்தில் ஒவ்வொரு ஞாயிறு தினத்தில் இடம்பெற்றுவரும் இலவச வைத்திய உதவிகள், மதிய போசனம் வழங்குதல், இலவச பாடசாலை என்பன ஒரு சாயி சேவையாக பலதரப்பட்ட ரீதியில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயிநிலையத்தில், பாபாவின் 99வது பிறந்தநாள், நொவம்பர் 23ம் திகதி, சனிக்கிழமை, பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் பல நிகழ்வுகளும் நடைப்பெறவுள்ளதுடன், அன்றைய தினம் காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தி வரை அன்னதானமும் இடம்பெறும். சிறப்பம்சமாக "பிறந்தநாள் கேக்" வெட்டுதல், திருவூஞ்சல், திரிமங்களாராத்தியும் நடைபெறவுள்ளதுடன், மாலை 5 மணிக்கு, பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனியும் இடம்பெறும்.

**எஸ் .என். உதயநாயகம்**
பகவான் ஸ்ரீ சத்ய
சாயி பாபா மத்திய நிலையம்
கொழும்பு.

## தற்காப்பின் தலை சிலம்பக் கலை

தொகுப்பு - து.சிந்துஜா



தமிழ் பாரம்பரியத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு விளையாட்டு மற்றும் தற்காப்புக் கலைக்கென்று தனிச் சிறப்பும் வரலாறும் உண்டு.

அந்த வகையில் தமிழர் தற்காப்புக் கலை மற்றும் விளையாட்டான கம்பு சுற்றுதல் எனப்படும் சிலம்பம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

அதன்படி ஒவ் வொரு ஆண்டும் நவபம்ர் மாதம் 22 ஆம் திகதி உலக சிலம்பம் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிலம்பு என்றால் ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும்போது வெளிவரும் ஒலியே சிலம்பம் என்ற பெயருக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

1999ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி உலக சிலம்பத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் குருஜி முருகன் செல்லையாவினால் முதன்மைப் பெயர் பதிவு சிலம்பம் ஒரு அமைப்பின் பெயராக ஒழுங்குமுறை ஆணையத் திலிருந்து பெறப்பட்டது.

இக் கலையில் தடியைக் கையாளும் முறை, கால் மற்றும் உடல் அசைவுகள் மூலம் எதிரிகளிடமிருந்து நம்மை எவ்வாறு காத்துக்கொள்ளுதல் ஆகியன முக்கியத்துவம் பெறுகிறது.

எதிராளியினால் வீசப்படும் கம்பினை தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்பக் கம்பினால் தொடுதல் போன்றவை அடிப்படையான விடயமாக பார்க்கப்படுகிறது.

இக் கலையை முறையாகக் கற்றுக் கொள்வதற்கு சரியாக ஆறு மாத காலம் தேவைப்படுகிறது.

முன்பெல்லாம் ஆண்கள் மட்டுமே கற்றுவந்த இக் கலையை தற்போது பெண்களும் கற்றுக் கொள்வது பாராட் டத்தக்கது.

சிலம்பம் என் பது வெறுமனே கலை, விளையா ட்டு என்று பார்ப்ப தோடு மட்டுமல்லாமல் அது உடலுக்கான ஒரு பயிற்சியாகவும் பார்க்கப்படுகிறது.

அதாவது, வளைந்து கொடுக்கும் தன்மை, கை மற்றும் கண்ணின் ஒருங் கிணைப்பு, கால் மற்றும் கண்ணின் ஒருங் கிணைப்பு, உடல் சமநிலை, தசை ஆற்றல், வேகம், தசை வலிமை, பொறுமை, சம யோசிதம் போன்றவை இதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய பலன்கள்.

வரலாறு

சிலம் பத் தின் வரலாற்றை உற்று நோக்கினால், ஆரம் பகாலத்தில் மக்கள் சிங்கம், புலி போன்ற காட்டு விலங்குகளிட மிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு கையா ண்ட உத்தியே சிலம்பம் என ப்படும் கலையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

அதாவது, தமது கைகளில் வைத்திருந்த தடி, கத்தி, கோடாரி ஆகியவற்றைப் பயன்படுத்தி விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். மனிதன் சண்டையிட உபயோகப்படுத்திய ஆயுதங்களில் மிகவும் பழைமையானது கம்பு எனப்படும் சிலம்பு ஆகும்.

ஆரம்பக் காலத்தில் இத னை சத்திரியர்கள் பயன்படுத்தினர். சிலம்பச் சுவடிகளில் குறிப்பிடப்படும் தொன்மையான சிலம்பச் சுவடு, அடி வரிசைகள் ஆகியன கால மாற்றத்தால் அதன் பெயர்கள் மற்றும் ஆடும் முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டன.

அதன்படி, வடக்கன் களரி, தெக்கன் களரி, சுவடு அடி முறை, கர்நாடகச் சுவடு, சிரமம், சைலாத், தஞ்சாவூர் குத்து வரிசை, நெடுங்கம்பு ஆகிய பெயர்களில் இந்தியாவில் ஆடப்பட்டு வருகின்றன. சான்றுகள் கி.மு. 2000 இற்கும் முற்பட்ட அகழ்வாய்வில் 32 வகையான சிலம்ப ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல் எகிப்தியர்கள் போரில் பயன்படுத்தியதாகக் கூறப்படும் நான்கு அடி நீளமுற்ற கம்பு பிரித்தானியாவிலுள்ள அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 5000 வருடங்கள் பழைமையானதாகக் கருதப்படும் இக் கலையை 2500 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த அகத்திய முனிவர் 64 கலைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். முக்கிய கூறுகள் மெய்ப்பாடம், உடற்கட்டு, மூச்சுப்பயிற்சி, குத்துவரிசை, தட்டுவரிசை, அடிவரிசை, பிடிவரிசை, சிலம்பாட்டம், வர்மம்.

மெய்ப்பாடம் உடல் வலிமையை அதிகரிக்கும் நோக்கில் உடற் பயிற்சிகளை செய்து உடலை தகுதிபெறச் செய்வது.

உடற்கட்டுப்பாடம் உடலின் நெகிழ்வை உறுதிப்படுத்தி கற்பிக்கப்படும் இரண்டாம் நிலை பயிற்சி. மூச்சுப்பாடம் மூன்றாவது பாடம் மூச்சுப்பாடம். கூடுதல் நுணக்கமிகு பயிற்சிகளை செய்ய இது ஏதுவாகும்.

**குத்துவரிசை:** எதிரியைக் கைகளால் வரிசையாகக் குத்துவதே குத்துவரிசை. எதிரியின் நிலை மற்றும் இடப்பெயர்ச்சிக்கு ஏற்ப தன் நிலைகளை மாற்றிக்கொள்வதாகும்.

**தட்டுவரிசை:** எதிரில் இருப்பவர் குத்துக்களை தம் மீது பாய்ச்சும்போது அவற்றை அவர் தம் நிலைக்கேற்பத் தன் நிலையை மாற்றித் தட்டிவிடுதல் என்பதே தட்டு வரிசை எனப்படுகிறது.

**பிடிவரிசை :** எதிரி தம்மை தாக்க வரும்போது அவர்களை தம் பிடிக்குள் கொண்டு வந்து தாக்குதலை முறியடிப்பது பிடி வரிசையாகும்.

**அடிவரிசை:** தம் காலடிகளைச் சூழலுக்கேற்ப மாற்றிக்கொண்டு எதிரியின் மீது அடி விழச் செய்தலே அடி வரிசையாகும். தடியின் அளவு நிலத்திலிருந்து ஒருவரின் நெற்றிப் புருவம் வரையில் தடி உயரமுடையதாக இருக்க வேண்டும்.



# நாளை 23 ஆம் திகதி: அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கருகில் தாழமுக்கம் உருவாகும் சாத்தியம்

(காத்தான்குடி நிருபர்)


கிழக்கு வங்காள விரிகுடாவின் அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் நாளை 23 ஆம் திகதி தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளதாக யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று கடும் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும் அதேவேளை 26 ஆம் திகதி தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையின் படி இது ஒரு புயலாக மாற்றம் பெறும் வாய்ப்புள்ளதென யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த யாழ் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், தற்போதைய நிலையின் படி இதன் நகர்வு பாதை கிழக்கு மாகாணத்துக்கு அருகாக நகர்ந்து, பின்னர் வடக்கு மாகாணத்தை அண்மித்து (தற்போதுள்ள நிலையில் இது கரையைக் கடக்கும் போது இதன் உள் வளையத்துக்குள் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களும் வெளிவளையத்துக்குள், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களும் அடங்குகின்றன) தமிழ்நாட்டின் கடலூர் புதுச்சேரிக்கிடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.



**எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கன மழை பெய்யக்கூடும்**

குறிப்பாக எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் மிக மிக கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில இடங்களில் 26 மற்றும் 27 ஆம் திகதிகளை உள்ளடக்கிய 48 மணி நேரத்தில் 350 மி. மீ. இனை விட கூடுதலாக மழைவீழ்ச்சி கிடைக்கும் வாய்ப்புள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் தற்போது கிடைத்து வரும் தொடர்ச்சியான மழை காரணமாக நிலம் நிரம்பு நிலையை எட்டியுள்ளது.

சில பகுதிகளில் வெள்ள அனர்த்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. எனவே கிடைக்கவுள்ள கனமழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

விவசாயிகளும் இக்கனமழையை கருத்தில் கொண்டு தங்களுடைய விவசாய நடவடிக்கைகளில் குறிப்பாக நெற் செய்கை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

எதிர்வரும் 26 மற்றும் 27ம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 60 தொடக்கம் 80 கி.மீ. வரையான வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள் நிலப்பகுதிகளில் காற்று 50 தொடக்கம் 70 கி.மீ. வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

எனவே கடுமையான காற்று



வேகத்தினால் பாதிக்கப்படக் கூடிய மரங்கள் மற்றும் பழைய கட்டிடங்கள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

எதிர்வரும் 26 மற்றும் 27ம் திகதிகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் காற்று மணிக்கு 60 தொடக்கம் 80 கி.மீ. வரையான வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள் நிலப்பகுதிகளில் காற்று 50 தொடக்கம் 70 கி.மீ. வேகத்தில் வீசும் வாய்ப்புள்ளது.

எனவே கடுமையான காற்று வேகத்தினால் பாதிக்கப்படக் கூடிய மரங்கள் மற்றும் பழைய கட்டிடங்கள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

இதன் காரணமாக எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இலங்கையின் வடக்கு, கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

இத்தாழமுக்கம் புயலாக மாறாது விட்டாலும் மேலுள்ள அதி தீவிர வானிலை நிகழ்வுகள் மற்றும் கடற் கொந்தளிப்பான நிலைமைகள் நிகழும். எனவே முன்கூட்டிய பாதுகாப்பு தயார்ப்படுத்தல் முறைமைகளைப் பின்பற்றுவது எமக்கு ஏற்படும் பாதிப்புக்களை கணிசமாகக் குறைக்கும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அதிகாரிகள் இந்த தாழமுக்கம் மற்றும் புயல் தொடர்பாக அவதானம் செலுத்துவது சிறந்ததெனத் தெரிவித்தார்.

## சதுரங்க போட்டியில் தேசிய மட்டத்திற்கு தெரிவு

(எம்.யூ.எம் சனூன், எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 06 ல் கல்வி பயிலும் முஹம்மது நதீம் சோபியா மனால் தேசிய, மாகாண மட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் றிஸ்கான் தெரிவித்துள்ளார்.

இதன்போது இம்மாணவிக்கு பாடசாலை சார்பாக ஆசிரியர்களின் பங்களிப்புடன் பரிசு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இவரை சிறந்த முறையில் வழிநடத்திய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பாடசாலை நிர்வாகம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.



## சட்டவிரோத மின்சார வேலியால் யானை பலி: காணி உரிமையாளரை கைது செய்ய நடவடிக்கை

புத்தளம்– மகாகும்புக்கடவல பிரதேசத்தின் பெத்திகம கிராமத்தில் மின்சாரம் தாக்கி காட்டு யானை யொன்று உயிரிழந்துள்ளதாக தெரிவித்த வனஜீவித் திணைக்கள அதிகாரிகள் காணியின் உரிமையாளரை கைது செய்வதற்காக நடவடிக்கையை மேற்கொண்டுள்ளவும் தெரிவித்தனர்.

மகாகும்புக்கடவல பிரதேசத்தின் பெத்திகம கிராமத்தில் ஒன்றரை ஏக்கரில் பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை பாதுகாப்பதற்காக விவசாயி ஒருவர் சட்ட விரோதமாக மின்சாரத்தை பெற்று பாதுகாப்பு வேலி அமைத்துள்ளார்.

இந்த விவசாயச் செய்கையை சாப்பிடுவதற்காக காட்டு யானைக்



கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு அக்காணியினுள் புகுந்து பயறு செய்கையை சாப்பிட்டு நாசம் செய்து விட்டு வெளியேற முற்பட்ட வேளையில் காட்டு யானை ஒன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக வனஜீவித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள காட்டு யானை சுமார் 6 அடியைக் கொண்டதும் 20.முதல் 25 வயது மதிக்கத்தக்கது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்காணியின் உரிமையாளரை கைது செய்வதற்காக நடவடிக்கையை மேற்கொண்டுள்ளவும் வனஜீவராசித் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## ஜனாஸா சங்கத்தின் காரியாலயம் திறப்பு




(எம்.யூ.எம்.சனூன் )

கற்பிட்டியின் நீண்ட நாள் தேவையாக காணப்படும் ஜனாஸா வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கான முதற்கட்ட வேலைத்திட்டத்தின் மூலம் கற்பிட்டியைச் சேர்ந்தவர்களின் நன்கொடைகள் கிடைக்கப்பெற்ற வண்ணம் உள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை இலகு படுத்தும் நோக்கோடு கடந்த செவ்வாய்க் கிழமை கற்பிட்டி ஜனாஸா சங்கத்திற்கான பிரதான காரியாலயம் கற்பிட்டி பிரதான வீதியில் காட்டுபாவா சந்தியில் ஜனாஸா வாகனக் கொள்வனவு குழுவின் தலைவர் ஜே.எம் தாரிக் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மஸ்ஜிதுல் புர்கானின் (புதுப்பள்ளி) பேஷ் இமாம் மௌலவி மிக்தாதின் துஆ பிரார்த்தனையுடன் இடம்பெற்ற பிரதான காரியாலய திறப்பு விழாவில் ஊரிலுள்ள சகல தரப்பினரும் கலந்து சிறப்பித்தனர் .

அங்கு கருத்து தெரிவித்த தலைவர், ஜனாஸா வாகனக் கொள்வனவுக்கான பாரியளவு நன்கொடைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் சகல நிதிகளையும் எதிர்வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## வளவாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(அக்கரைப்பற்று நிருபர்)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தினால் 2025 ஆம் ஆண்டு நடாத்தப்படவுள்ள பாடநெறிகளைப் பயிற்றுவிப்பதற்காக வளவாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தினால் ஆங்கிலம், சிங்களம், களிகம்பு, நடன நடனம், சங்கீதம் போன்ற பாடநெறிகள் பல வருடங்களாக போதிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி பாடநெறிகளுக்கு வளவாளராக விண்ணப்பிப்பவர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், அக்கரைப்பற்று பிரதேசத்தினை வசிப்பிடமாகவும், குறிப்பிட்ட துறையில் பட்டம் அல்லது டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது குறிப்பிட்ட துறையில் பாரம்பரிய கலைஞராக இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும். விண்ணப்பங்களை அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், அக்கரைப்பற்று எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்களை 0769227324 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னடைவு

**கனுஷியா புஷ்பகுமார்**



இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தீர்மானமிக்க தேர்தல் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்றது.

பாரிய மாற்றங்களையும் , திருப்பங்களையும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் உணர்த்தியுள்ளன.

76 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்த பழைய அரசியல் தலைமைகளுக்கும், கட்சிகளுக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத்தில் ஆசனங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு மொத்தமாக 159 ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் தேசிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றி பெற்றது.

நாட்டின் பெரும்பாலான இடங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.பிரதானமாக தமிழ்ப் பகுதிகளில் இதுவரை காலம் தமிழ் கட்சிகள் வெற்றி பெற்று வந்த நிலையில், இம்முறை தேர்தலில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட தமிழ் பகுதிகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியிருந்தது.

இதன் காரணமாக, நாடளாவிய ரீதியில் பாரம்பரியமாக ஆட்சி செய்து வந்த ஏனைய கட்சிகள் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளன.

குறிப்பாக, கடந்த நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிய சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

2020ஆம் ஆண்டில் ரணில் தலைமையில் காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச உள்ளிட்ட சுமார் 52 பேர் வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தி எனும் கட்சியை உருவாக்கினர். அன்று தொடக்கம் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தி வந்தது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் கூட சஜித் பிரேமதாசவுக்கு எதிர்பார்த்த மக்கள் ஆதரவு கிடைத்திருக்கவில்லை. அந்த எதிர்பாராத தோல்வி மற்றும் அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் தோல்வி என்பன ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனமாக்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியானது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய சில கட்சிகளுடன் இணைந்து கூட்டணியமைத்து போட்டியிட்டிருந்தது. அதே கட்சிகளுடன் கூடிய கூட்டணியிலேயே இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலிலும் போட்டியிட்டிருந்தது. தேசியப் பட்டியலில் ஐந்து ஆசனங்களை ஐக்கிய மக்கள் கூட்டணி பெற்றுக்கொண்டது. இந்த ஐந்து ஆசனங்களில் தற்போது ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயர் மாத்திரமே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது ஏனையவை தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக சஜித்தால் வெற்றிபெற்று ஆசனங்களை பெற்றுக் கொள்ள முடியாமையே இவ்வாறு தேசியப் பட்டியல் ஆசனங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள தடுமாற்றத்திற்கான காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மீது பல குற்றச்சாட்டுகளும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சஜித்துக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய உரையையும் ஆற்றியிருந்தார்.

மேலும், பல கட்சி உறுப்பினர்கள் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் மனக்கசப்பில் இருந்தமை தேர்தல் காலங்களில் அதிகளவில் பேசப்பட்டது.

கட்சிக்காக பாடுபட்டு உழைத்தவர்களை விட்டு, புதிதாக கட்சியில் இணைபவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது , கொடுத்த வாக்குறுதிகளை வழங்காமல் இருப்பது போன்ற பல குற்றச்சாட்டுகள் சஜித் பிரேமதாஸ மீது முன்வைக்கப்பட்டன.

கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச சமூக ஊடகங்களில் கடுமையாக கேலி செய்யப்பட்டமை அக்கட்சி அரசியல் மேடைகளில் எதிர்கொள்ள வேண்டிய மற்றொரு சவாலாக இருந்தது.

கடந்த சில வருடங்களாக சஜித் பிரேம அரசியல் மேடைகளில் ஜப்பானிய மொழியிலும் ஆங்கிலத்திலும் கருத்துக்களை வெளியிட்டு சமூக ஊடகங்களில் எதிர்க்கட்சி அரசியல் குழுக்களால் கேலி செய்யப்பட்டார்.

அரசியல் களத்தில் அரசியல்வாதிக்கும் மக்களுக்கும் இடையிலான உரையாடல் மிகவும் முக்கியமாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையிலேயே, கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு இணையாக ஐக்கிய மக்கள் கூட்டணி பலத்த பின்னடைவை சந்தித்தது.

2020ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தி 2,771,984 வாக்குகளைப் பெற்று 54 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது.

இம்முறை நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 1,968,716 வாக்குகளில் 40 ஆசனங்களையே பெற முடிந்தது.

குறைந்தபட்சம் 90 அல்லது 100 ஆசனங்களையாவது பெற முடியாவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்குள் சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவம் பெரும் சிக்கலை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளதாக தேர்தலுக்கு முன்னர் பல அரசியல் விமர்சகர்கள் தெரிவித்திருந்த நிலையில் தற்போது அவ்விடயம் ஓரளவுக்கு உண்மையாகியுள்ளது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை அதிகரித்து ஹர்ஷ டி சில்வாவை தலைவராக்க வேண்டும் என்ற நிலைபாட்டில் கட்சி உறுப்பினர்கள் பெரும்பான்மையானவர்கள் உள்ளனர். தவறான தலைமைத்துவம் காரணமாக சஜித் பிரேமதாச நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமல்லாது கட்சி உறுப்பினர்களிடையேயும் தவிர்க்கப்பட்டு வருகின்றமை தெளிவாகிறது.

**ஜனாதிபதித் தேர்தலில் மற்றும் அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலின் தோல்வி என்பனவற்றில் சஜித் பிரேமதாசவுக்கு எதிர்பார்த்த மக்கள் ஆதரவு கிடைத்திருக்கவில்லை. அந்த எதிர்பாராத தோல்வி ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனமாக்கியுள்ளது.**

சஜித் பிரேமதாசவின் உறவினர்களின் தலையீடும் கூட கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான முரண்பாடுகளுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சி என்பது எந்த அளவுக்கு முக்கியமாக பார்க்கப்படுகிறதோ அதே அளவிற்கு எதிர்க்கட்சியும் அவசியம் ஆகும்.

நாடாளுமன்றத்தில் வலுவான எதிர்க்கட்சி இல்லையென்றால் அது பெரிய பிரச்சனையை உருவாக்கும்.

ஆக, சஜித் பிரேமதாசவின் இந்த பின்னடைவு அவரது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா என்ற கேள்விகளையும் எழுப்பி வருகிறது.

# வடக்கில் காணி விடுவிப்பு : தெற்கில் சர்ச்சையை உருவாக்கும் மகிந்த தரப்பு

**பார்த்திபன்**





மூன்று தசாப்தங்களாக இராணுவத்தினரால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வடக்கின் தனியார் காணியொன்றை விடுவிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்களுக்கு சொந்தமான மூன்று ஏக்கர் காணியில் ஸ்தாபிக்கப்பட்ட பருத்தித்துறை, கற்கோவளம் இராணுவ முகாமை அகற்றும் நடவடிக்கை நவம்பர் 18ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளதோடு, இரண்டு வாரங்களுக்குள் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ராஜபக்ச குடும்பத்தில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள நாமல் ராஜபக்ச எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிர்காலத்தில் "பெரிய எண்ணிக்கையிலான" இராணுவ முகாம்கள் விடுவிக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

1995ஆம் ஆண்டு இராணுவம் பலவந்தமாக காணிகளை சுவீகரித்த பின்னர் இலங்கை சிங்கப் படைப்பிரிவின் 4ஆவது படையணிக்கு சொந்தமான இராணுவ முகாம் ஸ்தாபிக்கப்பட்டது.

உரிமையாளர்கள் தமது காணிகளை மீள வழங்குமாறு கோரி தொடர்ந்த போராட்டத்தை கருத்திற்கொண்டு அவர்கள் காணியின் உத்தியோகபூர்வ உரிமையாளர்களா என்பதை பரிசோதிக்குமாறு இராணுவ முகாமின் அதிகாரிகள் 2022ஆம் ஆண்டு பருத்தித்துறை பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும், காணியின் உரிமையாளர்கள் மூவர் என, பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியிருந்ததாகவும் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, 2023 ஒகஸ்ட் 14ஆம் திகதி இராணுவ முகாமை அகற்றுவதற்கு இராணுவம் தயாரான போது, பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு இராணுவ முகாம் அந்த இடத்தில் இருக்க வேண்டும் என பிரதேசவாசிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இராணுவத் தலைமையகத்திலிருந்து கிடைத்த உத்தரவிற்கு அமைய, இராணுவ முகாமை அகற்றும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்குத் தெரிவித்த, இராணுவ ஊடகம் மற்றும் உளவியல் நடவடிக்கைகளின் பணிப்பாளர் நாயகமும் இராணுவப் பேச்சாளருமான மேஜர் ஜெனரல் ரசிக குமார, இராணுவ முகாம் முழுமையாக அகற்றப்பட்டதன் பின்னர் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

"இராணுவ தளத்தில் மின்கம்பங்களை அகற்றி சுத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இராணுவத்தினருக்கு ஏற்கனவே கிடைத்த கோரிக்கைகளின் பிரகாரம் இந்த காணிகளை விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட்ட பின்னர் காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படும்." எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, எதிர்வரும் மாதங்களில் பெருமளவிலான இராணுவ முகாம்களை அகற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கூறும் நாமல் ராஜபக்ச, பாதுகாப்பு தரப்பினரின் கலந்துரையாடல் மற்றும் மீளாய்வுக்கு பின்னர் காணி விடுவிப்பினை மேற்கொண்டால் பிரச்சினைகள் இல்லை என கூறுகிறார்.

"இராணுவ முகாம்களை அகற்றுவது மற்றும் காணிகளை விடுவிப்பது என்பது பாதுகாப்புப் படையினருடன் கலந்துரையாடல் மற்றும் மீளாய்வுக்குப் பின்னரே பொறுப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படக்கூடாது என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எக்ஸ் தளத்தில் மேலும் பதிவிட்டுள்ளார்.

அவரது கட்சியின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஆட்சியமைத்திருந்த சந்தர்ப்பத்தில், பருத்தித்துறை கற்கோவளம் இராணுவ முகாம் அமைந்திருந்த காணியை மீளக் கையளிப்பதற்காக, இராணுவமும் உள்ளூராட்சி அதிகாரிகளும் காணியின் உரிமையை உறுதிப்படுத்த

**“இராணுவ தளத்தில் மின்கம்பங்களை அகற்றி சுத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இராணுவத்தினருக்கு ஏற்கனவே கிடைத்த கோரிக்கைகளின் பிரகாரம் இந்த காணிகளை விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

அதன் உறுப்பினர்களோ அல்லது நாமல் ராஜபக்சவோ இது தொடர்பில் அதன்போது எந்தவொரு கருத்தையும் வெளியிட்டதாகத் தெரியவில்லை. நவம்பர் 10 ஆம் திகதி வவுனியாவில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, வடக்கில் சுவீகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை மீள வழங்குவது குறித்தும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தின் தமிழ் நாடகக்குழுவுக்கு இரகசிய பொலிஸ் அச்சுறுத்தல்



குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட நபர் மேற்கொண்ட விசாரணையால் மலையக தமிழர்களின் கலை, கலாசாரத்தை வெளிப்படுத்தும் குழுவினர் அச்சமடைந்துள்ளனர்.

மக்களுடைய பொழுதுபோக்கிற்காக கலையை வெளிப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வரும் தமக்கு விசாரணை என்ற பெயரில் தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக மலையகத்தில் உள்ள தியேட்டர் மேட்ஸ் நாடகக்குழு தெரிவிக்கின்றது.

தியேட்டர் மேட்ஸ் நாடகக்குழு, கடந்த வருடம் பொகவந்தலாவை, கொட்டியாகல பிரதேசத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த "லயத்து கோழிகள்" நாடகத்தை தடுப்பதற்காக இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து செயற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தியேட்டர் மேட்ஸ் நாடகக் குழு "கோடியோரக் கூடல்" என்ற தலைப்பில் சிறுவர்களை மையகமாகக் கொண்ட நாடகத்தை ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் பல்வேறு பகுதிகளில் நடத்தி வருவதாகவும், நவம்பர் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொகவந்தலாவையில் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டதாகவும் பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாடகம் நடந்து கொண்டிருந்த போது, அங்கு வந்த நபர் ஒருவர், தன்னை குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி எனக் கூறி, "இங்கே என்ன செய்கிறீர்கள், யார் இதனை ஏற்பாடு செய்தது?" போன்ற கேள்விகளை எழுப்பி, இந்த நாடகம் அரங்கேற்றம் தொடர்பாக விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அந்த இடத்திற்கு தன்னை அனுப்பி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அப்போது நாடகக் குழுவைச் சேர்ந்தவர்கள், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளும் நாடகத்தைப் பார்க்க முடியும் எனவும், நாடகக்குழுவை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஏன் பின்தொடர்கின்றனர் எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாடகங்கள் தொடர்பில் தேடி கண்டறிவதை விட பொகவந்தலாவையில் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணை செய்ய இன்னும் பல முக்கிய விடயங்கள் உள்ளதாகவும் அதுத் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் நாடகக் குழுவினர், தன்னை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரி என அறிமுகம் செய்து கொண்ட நபரிடம் கூறிய போது இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நபர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த தனது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை காட்டுமாறு நாடக குழுவினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்து விட்டு அங்கிருந்து சென்றதாக பிரதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் ஜூலை மாதம், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் நாடகம் நடத்தப்படுவதைத் தடுக்க அரச பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட முயற்சி குறித்து தியேட்டர் மேட்ஸ் நாடகக் குழு முறைப்பாடு அளித்திருந்தது.

ஜூலை 09 ஆம் திகதி மாலை, பொகவந்தலாவை, கொட்டியாகல தோட்டத்தில் அரங்கேற்றப்படவிருந்த "லயத்து கோழிகள்" நாடகத்தை தடுக்க தோட்ட நிர்வாகம், இராணுவம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படை இணைந்து செயற்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஜூலை 26 ஆம் திகதி முறைப்பாடு செய்த, நாடகத்தின் நெறியாளர், எதிர்காலத்தில் இவ்வாறான கலைச் செயற்பாட்டு முயற்சிகளின்போதான பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

# திக்வெல்ல பகுதியில் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி ஒருவர் பலி



திக்வெல்ல, வலஸ்கல பிரதேசத்திலுள்ள கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்கு அருகில் நேற்று (21) அதிகாலை 5.30 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வலஸ்கல பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச்சூடு நடத்தியது யார் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் பெயரில் உள்ளூர் நபரிடம் பணம் பறித்ததற்காக உயிரிழந்தவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், இந்த துப்பாக்கிச் சூட்டுக்கும் இந்த விடயத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா என்பது குறித்து விசாரணை அதிகாரிகள் அவதானம் செலுத்தி வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு T-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



யாழ். உடுத்துறை மகா வித்தியாலயத்தில் மாணவர் நாடாளுமன்றம் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. வித்தியாலய அதிபர் ந.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் அ.சா. அரியகுமார் கலந்துகொண்டார்.

# கற்பாறைகள் அகற்றப்படாமையால் தொடர்ந்தும் போக்குவரத்துக்கு தடை



(ராமு தனராஜ்)

பதுளை– செங்கலடி பிரதான வீதியில் பசறை 13 ம் கட்டை பகுதியில் வாகனப் போக்குவரத்து நான்காவது நாளாக தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

கடந்த 18 ம் திகதி அதிகாலை 3.00 மணியளவில் பாரிய கற்பாறைகள் சரிந்து வீதியில் விழுந்தமையினால் குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் சீரற்ற காலநிலையிலும் வீதியிலிருக்கும் பாரிய கற்களை அகற்றும் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் பயணிகள் பாரிய சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இன்னும் ஓரிரு நாட்களில் கற்களை அப்புறப்படுத்தி வீதியை போக்குவரத்துக்காக திறக்க முடியும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# துபாயில் ஒளிந்திருக்கும் கடத்தல்காரரின் இரு சகாக்கள் போதைப்பொருளுடன் கைது



துபாயில் ஒளிந்திருக்கும் பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான மஹவத்த சாமரவின் இரு பிரதான சகாக்களை 3.5 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியின் உத்தரவுகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 29 வயது மற்றும் கடவத்தை பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர்.இவர்களிடமிருந்து 03 கிலோ 536 கிராம் ஐஸ் போதைப்பொருள், போதைப்பொருள் கடத்தல் மூலம் கிடைக்கப் பெற்ற பத்து இலட்சம் ரூபா பணம், கார் மற்றும் 03 கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது துபாயில் தலைமறைவாகியுள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான மஹவத்த சாமரவின் பிரதான கையாட்கள் இருவரே நாட்டின் போதைப்பொருள் வலையமைப்பை வழிநடத்திச் செல்வதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இன்று விவசாயபீட பொன்விழா

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் 36வது சர்வதேச ஆய்வு மாநாடு இன்று (22) வெள்ளிக்கிழமை "உறுதியான உணவு முறைகளை நோக்கி துல்லியமான விவசாயம்" என்ற தொனிப்பொருளில் விவசாயபீட பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுர்ஜித் ,சிறப்பு அதிதியாக இலங்கைக்கான கனடா நாட்டின் தூதுவர் எரிக்வோல்ஸ்சும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் ஆய்வு மாநாட்டில் விவசாயத்துறையில் முன்னோடிகள் பலரது ஆய்வுக் கட்டுரைகளையும், சிறப்புக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளதோடு பலரது உரைகளும் இடம்பெறவுள்ளன. முதுநிலை மற்றும் முதுநிலை தத்துவமானி ஆய்வுகளோடு கலாநிதி ஆய்வுகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவ் ஆய்வு மாநாட்டிற்கு பல நாடுகளிலிருந்தும் விவசாயத்துறை ஆய்வாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்வருடாந்த ஆய்வு மாநாட்டினை முன்னிட்டு விவசாயபீடம் அலங்கரிக்கப்பட்டு காணப்படுகிறது.

# சமூக வலைத்தளத்தில் அபகீர்த்தியை ஏற்படுத்திய பெண் கைது

(கி.வசந்தன்)

சமூக வலைத்தளம் மூலம் நபர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

லண்டனில் வசித்து வரும் பெண் ஒருவர், வெளிநாட்டிலிருந்து வவுனியாவிற்கு வந்து, தனது வீட்டில் தற்போது குடியிருக்கும் நபர் ஒருவர் தனது வாகனத்தை தரவில்லை எனத் தெரிவித்து அந்நபருக்கு எதிராகத் தொடர்ச்சியாக ரிக்ரொக் சமூக ஊடகத்தில் கருத்துக்களைப் பதிவிட்டு வந்திருந்தார்.

குறித்த நபர் நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு இருந்தார். இந்நிலையில் தேர்தல் முடிந்த பின்னர் அவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பெண்ணை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இரு இளைஞர்கள் பலி



முல்லைத்தீவு, மல்லாவி வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் (20)மாலை இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாங்குளத்திலிருந்து மல்லாவி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் மல்லாவி பகுதியிலிருந்து மாங்குளம் நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதிலேயே குறித்த விபத்து சம்பவித்துள்ளது. சம்பவத்தில் வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த சந்திரன் விதுசன் (20),புதிய கொலணி மாங்குளம் பகுதியைச் சேர்ந்த விஜயகுமார் விதுர்சன் (20) என்ற இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை படுகாயமடைந்த மாங்குளம் பகுதியை சேர்ந்த மற்றைய இளைஞர் மாங்குளம் வைத்தியசாலை நோயாளர் காவுவண்டி ஊடாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் உயிரிழந்த இருவரின் சடலங்களும் மாங்குளம் ஆதார வைத்தியசாலையிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டன. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்ற பட்டியல் வெளியீடு

## டிசம்பர் 05 க்கு முன் மேன்முறையீடு செய்யலாம்

(முகம்மட் முக்தார்)

நாடாளாவிய ரீதியில் உள்ள தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான 2025 ம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றப்பட்டியலுக்கமைய மேன்முறையீடுகளை டிசம்பர் மாதம் 05 ம் திகதிவரை தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றக்கிளைக்கு சமர்ப்பிக்கலாமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளில் தொடர்ச்சியாக 10 வருடமும் அதற்கு மேலும் கடமையாற்றி வரும் அனைத்து ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படுவதுடன் மாகாணப் பாடசாலைகளில் இருந்து தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற விண்ணப்பித்தோரும் வெளியிடப்பட்டுள்ள தேசியப்பாடசாலை இடமாற்றப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பாடசாலை ஆசிரியர் இடமாற்றங்கள் யாவும் 2025 ம் ஆண்டின் புதிய கல்வியாண்டு ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள 365 தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இவ்விடமாற்றப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

# காணியற்றோர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கி வைப்பு





கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் தியாவட்டவான் கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணியற்றோர்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை (20) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அரச காணிகளில் குடியிருந்து அவற்றை பராமரித்து வரும் மக்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ், மாகாண காணி நிருவாகத் திணைக்களத்தினால் அனுமதி பெற்று காணிக் கச்சேரிகளை நடாத்தி தெரிவு செய்யப்பட்ட 93 பயனாளிகளுக்கான முதலாம் கட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ. றமீஸா, காணி வெளிக்கள போதனாசிரியர் சி.எம் எம். சமீம் மற்றும் காணிக் கிளை உத்தியோகத்தர்களான ஜி. சந்திரகாந்தன், எம். எம்.அன்வர், ஜி. கமல்ராஜ், எம்.எஸ். எப். றியாஸா, ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தின்

# ஐந்து ஆண்டு திட்டம் அங்குரார்ப்பணம்





மட்டக்களப்பு மாவட்டத்தின் தேவைப்பாடுகள் உட்பட அனைத்து விடயங்களும் அடங்கிய ஐந்து ஆண்டு திட்டம் நேற்று (21) அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

2024-2029வரையில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த திட்டம் தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து திணைக்களங்கள் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையின் கீழ் யுஎன்டிபி.யினி நிதியுதவுதவியுடன் இந்த ஐந்து வருட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐந்து திட்டங்களை உள்ளடக்கியதாக இந்த ஐந்துவருட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

விவசாயம்,கால்நடை,மீன்பிடி உட்பட உற்பத்தி துறை சார்ந்த திட்டங்கள் உள்ளடக்கியதாகவும் நீர்ப்பாசனம்,வீதி புனரமைப்பு உட்பட பல விடயங்களை உள்ளடக்கியதாக உட்கட்டுமான திட்டங்கள்,சேவைத் துறைகள் உட்பட பல்வேறு துறைகளின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக பல்வேறு விடயங்கள் இந்த ஐந்தாண்டு திட்ட நூலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் வளங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு அதற்கான முதலீடுகளைப்பெற்று தொழில்துறைகளை முன்னேற்ற நிலைக்கு கொண்டுசென்று ஏற்றுமதி துறையினை அதிகரித்தல் மற்றும் வேலைவாய்ப்புத்துறையினை அதிகரித்தல் உட்பட பல்வேறு திட்டங்கள் இதன்மூலம் முன்மொழியப்பட்டுள்ளன.

இதனை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த்,மேலதிக அரசாங்க அதிபர் காணி திருமதி நவரூபரஞ்சினி முகுந்தன்,மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் நவநீதன்,யுஎன்டிபி. மாவட்ட திட்ட பணிப்பாளர் பார்த்தீபன் மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து துறைகளும் ஆய்வுசெய்யப்பட்டு இந்த திட்டம் இலங்கையின் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களை அரச மற்றும் அரசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல்,வெளிநாட்டு முதலீடுகளைப்பெற்றுக்கொள்ளல் ஊடாக,

செயற்படுத்துவதற்கும் அதனை ஆறு மாதகாலத்திற்கு ஒருமுறை ஆய்வுசெய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் அனைத்து வளங்களையும் கொண்டமாவட்டமாகவுள்ள நிலையில் இறக்குமதிகளை குறைத்து ஏற்றுமதிகளை செய்வதற்கான திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக,

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே.முரளிதரன் இதன்போது தெரிவித்தார்.

# மீன்களை கொல்வதற்கு எதிராக நடவடிக்கை



தடைசெய்யப்பட்ட வலைகள் மற்றும் வெடிபொருட்கள் மூலம் மீன்களை கொல்வதற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கடற்படையினருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (20) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம், இலங்கை கடற்படை, கடற்றொழில் கூட்டுத்தாபனம், கொட்பே மீன்பிடி துறைமுகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக 07.11.2024 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

தற்போதைய அதிகாரிகள் அரசியல் செல்வாக்கு அல்லது வேறு எவரது செல்வாக்கிற்கும் அஞ்சாமல் தமது கடமைகளை மேற்கொள்ளுமாறும், அரசியல் செல்வாக்கு இன்றி தமது கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சூழல் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதால் மீனவ மக்களின் நலனுக்காக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கல்முனை உவெஸ்லியில்

# ஒளி விழாவும் மாற்றுத் திறனாளிகள் தினமும்





(செல்லையா-பேரின்பராசா)

நூற்று நாற்பத்தொரு வருட கால கல்வி வரலாற்றைக் கொண்ட கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் கிறிஸ்தவ மன்றம் ஏற்பாடு செய்து நடாத்திய ஒளி விழா நிகழ்வும் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தினமும் நேற்று 21.11.2024 இப் பாடசாலை அதிபர் செல்லத்தம்பி கலையரசன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் , இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் வடக்கு -கிழக்கு மாகாண திருமாவட்ட அவையின் முன்னாள் தலைவர் அருட்திரு எஸ்.டி.தயாசிலன் கல்முனை தமிழ் பிரிவுக்கான முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி கே.தயாசீலன், கல்முனை மெதடிஸ்த சேகர முகாமைக் குரு அருட்திரு ரவி முருகுப்பிள்ளை, அருட்பணி எஸ்.ரமேஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

மேலும் இப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வ.பிரபாகரன் ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் பொ. ஜெகநாதன் ஆசிரிய ஆலோசகர் முகம்மட் சியாம் , ஓய்வு நிலை அதிபர்களான திருமதி பேரின்பராசா ச.தேவச்சந்திரா,ஈ. அருள்நேசன், செல்லையா-பேரின்பராசா, வே.தங்கவேல் உட்பட பலர் அழைப்பு அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்

இந்த வைபவத்தில் கிறிஸ்தவ வேத வாக்கியம் மும்மொழிகளிலும் வாசிக்கப்பட்டது.இவ் விழாவில் இயேசு கிறிஸ்துவின் வருகையை குறிக்கும் பல்வேறுபட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் இப் பாடசாலையில் இயங்கும் விசேட தேவையுடைய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை சிறப்பம்சமாகும்.

## திருகோணமலை மாவட்டத்தில்

# டெங்கு, மலேரியா நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய், பேராறு பகுதியில் டெங்கு மற்றும் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் பரிசோதனை நடவடிக்கைகள் நேற்று (21) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திருகோணமலையில் உள்ள 12 பொது சுகாதார பிரிவுகளில் இந்த பரிசோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அதிகாரி சதுர கொத்தேதென்ன தெரிவித்தார்.

இதன் ஆரம்ப கட்டமாக நேற்று கந்தளாய் பேராறு பகுதியில் முப்பது வீடுகளில் இந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக சுகாதார அதிகாரி மேலும் கூறுகையில்,

”நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான சூழல் இருப்பதே டெங்கு மற்றும் மலேரியா நோயின் ஆபத்துக்கு முக்கிய காரணமாகும்.

எனவே, பொதுமக்கள் தங்கள் வீடுகளில் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.அப்போதுதான் இந்த நோயின் ஆபத்துகளில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும், டெங்கு மற்றும் மலேரியா நோயின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# “ஏஐ” தொழிநுட்பத்தை பயன்படுத்தி மாணவிகளின் நிர்வாண படங்கள்

## பெற்றோரின் அவதானம் அவசியம்

இலங்கையில் பாடசாலை மாணவிகளின் புகைப்படங்களை யுஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிர்வாண புகைப்படங்களாக வடிவமைத்து மாணவிகளை அச்சுறுத்தும் மோசடி கும்பல்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளதால் பெற்றொர்கள் அவதானத்துடன் இருக்குமாறு இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த பொறியியலாளர் சாருக தமுனுபொல் இந்த மோசடி கும்பல் சமூக ஊடகங்களில் காணப்படும் பாடசாலை மாணவிகளின் புகைப்படங்களை யுஐ தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிர்வாண புகைப்படங்களாக மாற்றி,உரிய மாணவிகளிடம் அந்த புகைப்படங்களைப் பகிர்ந்து அவர்களை அச்சுறுத்தி பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர். பாதிக்கப்பட்ட மாணவிகள் இந்த மோசடி கும்பலுக்கு அஞ்சி தங்களது நிர்வாண புகைப்படங்களை அனுப்பி மோசடி கும்பலின் ஆலோசனைகளைப் பின்பற்றுகின்றனர். இவ்வாறான சம்பங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளதாகவும் உயர் தர மாணவிகளே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பத்தாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு





சபாநாயகர் அசோக்க ரன்வல


பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி














## மருத்துவமனையில் ஏற்பட்ட தீ

# உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15 ஆக உயர்வு

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம், ஜான்சி மாவட்டத்திலுள்ள மருத்துவமனை ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. குழந்தைகள் பராமரிப்பு அறையிலேயே இத் தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

இதில் மூச்சுத் திணறல் மற்றும் தீக் காயங்களினால் 10 குழந்தைகள் உயிரிழந்தன. 39 குழந்தைகள் காயங்களுடன் மீட்கப்பட்டதோடு அதில் சில குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இத் தீ விபத்தில் காயமடைந்த குழந்தைகளில் மேலும் ஐந்து குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

இதன் மூலம் இத் தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

# அரச ஊழியர்களின் வயிற்றில் அடிக்க வேண்டாம்



## தி.மு.கவை சாடும் சீமான்

ஓய்வூதிய இயக்குநரகத்தை கலைத்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர முடியாத சூழலை உருவாக்கிய தி.மு.க அரசு அரச ஊழியர்களுக்கு மிகப்பெரிய அநீதியை இழைத்துவிட்டதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த சட்டசபை தேர்தலில் ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று தி.மு.க அரசு வாக்குறுதி அளித்தது.

ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றரை வருடங்கள் கடந்தும் இன்றுவரை அதனை நிறைவேற்ற மறுத்து அரச ஊழியர்களின் வயிற்றில் அடிப்பது கொடுங்கோன்மையாகும்.

மேலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது கண்டனத்துக்குரியது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பணிக்குச் சேர்ந்த அனைத்து அரச ஊழியர்களும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் எனப்படும் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வலுக்கட்டாயமாக இழுக்கப்பட்டனர்.

இதன் காரணமாக அதுவரையில் கிடைத்து வந்த பணிக்கொடை, ஓய்வூதியம் என்று எதுவும் முழுமையாக கிடைக்காமல் போனது.

அதற்கு மாற்றாக, பணியின்போது அரச ஊழியர்களின் சம்பளத்திலிருந்து பிடிக்கப்படும் தொகை மட்டும் அவர்கள் ஓய்வு பெற்றதும் திருப்பி வழங்கப்படும் எனவும் அன்றைய அ.தி.மு.க அரசு அறிவித்திருந்தது.

ஆனால், ஆரம்பத்தில் இருந்தே இத் திட்டத்துக்கு அரச ஊழியர்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வந்தனர். 13 வருட போராட்டத்துக்குப் பின்னர் 2016 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய குழுவொன்றை நியமித்தார்.

ஆனால், 2018 ஆம் ஆண்டிலேயே குறித்த குழு அறிக்கையை தமிழக அரசிடம் அளித்தது.

மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்த தி.மு.க அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அறிவிக்கும் என அரச ஊழியர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்த ஓராண்டு நிறைவுறும் நாளில் பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட வாய்ப்பில்லை என கடந்த 2022 ஆண்டு மே மாதம் சட்டப் பேரவையில் அறிவித்து, அரச ஊழியர்களை ஏமாற்றியது.

தி.மு.க அரசு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனக் கூறி ஏமாற்றி வருவது அரச ஊழியர்களுக்கு செய்யும் பச்சைத் துரோகம்.

அரசின் புதிய அறிவிப்பானது அரச ஊழியர்களின் தலையில் பேரிடியை இறக்கியுள்ளது.

ஓய்வூதிய இயக்குநரகத்தை கலைத்ததனால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை எக் காலத்திலும் கொண்டு வர முடியாத ஒரு சூழலை தி.மு.க உருவாக்கியுள்ளது.

இதன் மூலம் அரச ஊழியர்களுக்கு மன்னிக்க முடியாத பெரும் துரோகத்தை தி.மு.க அரசு செய்துள்ளது.

எனவே, தி.மு.க அரசு இதற்கு மேலும் அரச ஊழியர்களின் வயிற்றில் அடிப்பதை நிறுத்தி, 20 ஆண்டு காலமாகப் போராடிவரும் அரச ஊழியர்களின் நியாயமான கோரிக்கையான பழைய ஓய்வூதிய முறையை மீண்டும் நடைறைப்படுத்த வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியை கொலை

## வலுக்கும் கண்டனம்



இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மேல்நிலைப் பாடசாலை ஆசிரியயை ஒருவர் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் வேலூர் மாவட்ட அனைத்து வகை ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இதுபோன்ற ஒரு செயலை செய்தவருக்கு கடும் தண்டனையை தமிழக அரசு வழங்க வேண்டும். இக் கொடூர செயலுக்கு கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாதிக்கப்பட்டவருக்கு உரிய நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

அரசப் பாடசாலைகளுக்குள் நுழைந்து யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்கின்ற நிலை இருப்பதால் தமிழக அரசு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசப் பாடசாலைக்கு செய்து தர வேண்டும்.

இப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக காவலர், இரவு காவலர் மற்றும் அலவலக உதவியாளர் உள்ளிட்ட பணியிடங்களை தமிழக அரசு உடனடியாக நிரப்ப வேண்டும்.

ஆசிரியர் மற்றும் மாணவர்களை பாதுகாக்க சிறப்பு பணி பாதுகாப்பு சட்டத்தை தமிழக அரசு இயற்ற வேண்டும் என இந்தியப் பாடசாலை ஆசிரியர் கூட்டமைப்பு சார்பிலும் வேலூர் மாவட்ட அனைத்து வகை ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பிலும் தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்" என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ் - லொறி விபத்து

## ஐவர் உயிரிழப்பு

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் பஸ்ஸும் லொறியும் மோதிக் கொண்டதில் ஐந்து மாத குழந்தை உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

டில்லியிலிருந்து அஸ ாம்கரை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து லொறியின் பின்புறத்தில் மோதியுள்ளது.

இதில் ஐவர் உயிரிழந்துள்ளதோடு, 15 இற்கும் அதிகமானோர் பேருந்தின் இடிபாடுகளுக்குள் சிக்கினர்.

இதனைக் கண்ட அருகிலிருந்தவர்கள் பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்து சிக்குண்டவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.



# பழங்குடியின சான்றிதழ் கோரி நூதன போராட்டம்

இந்தியாவின் திருவள்ளூர் மாவட்டம், ஈகுவார்பாளையம் கோங்கல்மேடு பகுதியில் சுமார் 30 வருடங்களுக்கும் அதிகமாக 46 மலைக்குறவர் இன குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பழங்குடியின மக்கள் மூங்கில் கூடைகளை முடைந்து அதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

ஆனால், இம் மக்களின் குழந்தைகளுக்கு சரியான பழங்குடியின சான்றிதழ் இல்லாததால் அரசினால் எதுவித சலுகைகளையும் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது.

குறித்த மக்கள் தங்களுக்கு பழங்குடியின சான்றிதழ் வழங்கக்கோரி வருவாய்த் துறையிடம் தொடர்ந்தும் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இந்நிலையில், இவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை பொன்னேரி சார் ஆட்சியர் அலுவலகம் முன்பு அமர்ந்து மூங்கில் கூடைகளை முடைந்து நூதனமான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர், மாநில துணை செயலாளர்கள், மலைக்குறவர் பழங்குடியின மக்கள் முன்னேற்ற சங்கத் தலைவர், பாடசாலை செல்லும் பிள்ளைகள், கைக் குழந்தைகள், பெண்கள் என ஏராளமானோர் பங்குபற்றி கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கோரிக்கைகள் தொடர்பில் பொன்னேரி சார் ஆட்சியர் வாகே சங்கேத் பல்வந்த், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்க நிர்வாகிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தியதையடுத்து மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர்.

# இந்தியாவின் வித்தியாசமான கட்டிடம் பட்டியலில் இடம்பிடித்தது



இந்தியாவின் தெலுங்கான மாநிலம், ஐதராபாத்திலுள்ள தேசிய மீன் வள மேம்பாட்டு வாரிய கட்டிடமொன்று ராட்சத மீன் வடிவத்தில் கட்டப்பட்டுள்ளது.


இக் கட்டிடம் இரவு நேரங்களில் நீல நிற விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பார்க்கும்போது ராட்சத மீன் ஒன்று நீந்திச் செல்வதைப் போல் உள்ளது. உலகளாவிய ரீதியில் உள்ள வித்தியாசமான கட்டிடங்கள் பட்டியலில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

உலக வலம் WORLD NEWS

# உக்ரைன் போர்

## மிகப் பெரிய ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டம்



ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கி மூன்று ஆண்டுகளை அண்மிக்கும் நிலையில், உக்ரைனை பாரிய புதிய ஏவுகணை மூலம் தாக்கப் போவதாக இப்போது அச்சுறுத்தியுள்ளது.

உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்டி, ரஷ்ய இராணுவம் RS-26 சுரடிநணா ஏவுகணைகளை உக்ரைனின் தலைநகரான கிவ் மீது ஏவுவதற்கு தயாராகி வருவதாக தி டெலிகிராப் நேற்று வியாழக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக பாதுகாப்பு காரணங்களுக்காக நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கத்திய நாடுகள் கிவ்வில் உள்ள தங்கள் தூதரகங்களை மூடிவிட்டன.

அமெரிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தி ரஷ்யா மீது உக்ரைன் தாக்குதல் நடத்திய ஒரு நாளுக்கு பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், புதன்கிழமை பிற்பகுதியில் தனது தூதரகத்தை மீண்டும் திறந்ததாக அமெரிக்கா அறிவித்தது.

RS-26 Rubezh ஏவுகணை என்றால் என்ன?

RBC-Ukraine அறிக்கையின்படி, RS-26 சுரடிநணா ஆனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையுடன் கூடிய ஒரு ரஷ்ய மொபைல் தரை அடிப்படையிலான மூலோபாய ஏவுகணை அமைப்பு ஆகும்.

சுளு-26 ஆனது லுயசள திட்டத்தின் (RS-24 Yars) வடிவமைப்பின் அடிப்படையில், ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளை ஊடுருவிச் செல்லும் வகையில் மேம்படுத்தப்பட்ட சூழ்ச்சித்திறன் கொண்ட போர்க்கப்பல்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

சுளு-26 சுரடிநணா இன் முதல் வெற்றிகரமான சோதனை மே 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஏவுகணை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு திட்டமிடப்பட்ட வரிசைப்படுத்துதலுடன் 2015ஆம் ஆண்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில், குறித்த ஏவுகணை அமைப்பு 2027 வரை ரஷ்யாவின் ஆயுதத் திட்டத்தில் இருந்து விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த ஏவுகணை இதற்கு முன்பு போரில் பயன்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இந்த ஏவுகணை ஒலியை விட ஐந்து மடங்கு வேகத்தில் பறக்கும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், மொஸ்கோவை தளமாகக் கொண்ட செய்தித்தாள் ஒன்று, காஸ்பியன் கடலில் உள்ள அஸ்ட்ராகான் பகுதியில் இருந்து RS-26 ஏவுகணைகளை ஏவுவதற்கு ரஷ்யா தயாராகி வருவதாக கூறியுள்ளது.

# பிரித்தானியாவிலும் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்கள் தடை?

அவுஸ்திரேலியாவைத் தொடர்ந்து, பிரித்தானியாவும் 16 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினருக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்யத் திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு தொழில்நுட்ப செயலாளர் பீட்டர் கைல் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை ஒன்லைனில் பாதுகாப்பாக வைத்திருக்க ”என்ன தேவையோ அதைச் செய்வேன்” என்று கைல் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சட்ட நிறுவனமான ஃப்ரீத்ஸைச் சேர்ந்த அயோனா சில்வர்மேன், சாத்தியமான சமூக ஊடகத் தடையை ”கடல் அளவிலான பிரச்சினையில் ஒரு சிறு துளி” என்று விவரித்தார்.

இதன்படி, பதின்வயதினர் ஒன்லைனில் சிக்கலான விடயங்களை அணுகுவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

”அரசாங்கம் பெரிதாக சிந்திக்க வேண்டும், இதுவொரு கலாசார மாற்றம் தேவைப்படும் ஒரு பிரச்சினையாகும், மேலும் தொழில்நுட்பத்தை விட ஒரு படி மேலே இருக்க சட்டம் தேவைப்படுகிறது,” என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு சமூக ஊடகங்களில் இருந்து தடை செய்யும் சட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளதை அடுத்து சமூக ஊடகங்களை சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தும் யோசனை பிரித்தானியாவில் முன்னிலைப் பெற்றுள்ளது.

முன்னதாக, அவுஸ்திரேலியாவின் தகவல் தொடர்பு அமைச்சர் மிச்செல் ரோலண்ட், 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் உலகின் முதல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.

இந்நிலையில், தற்போது பிரித்தானியாவில் 16 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினருக்கு சமூக ஊடகங்களைத் தடை செய்யும் சட்டம் தயாரிக்கப்படுவதாக பீட்டர் கைல் மேலும் தெரிவித்துள்ளார்.



# தெற்கு பெய்ரூட்டில் இஸ்ரேலியப் படைகள் குண்டுவீச்சு



இஸ்ரேலியப் படைகள் தெற்கு பெய்ரூட்டின் ஹரேட் ஹ்ரீக் பகுதியில் நேற்று வியாழக்கிழமை குண்டுவீசித் தாக்கியுள்ளன. இந்தப் பகுதியில் குடியிருப்பாளர்களை வெளியேற உத்தரவிட்ட சிறிது நேரத்திலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், லெபனானின் தேசிய செய்தி நிறுவனம் இதை ”மிகவும் வன்முறைச் சோதனை” என்று தெரிவித்துள்ளது. இதனிடையே, இஸ்ரேலின் இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரமான ஜெனினில் அதன் இரண்டு நாள் மேற்கொண்ட தாக்குதல் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

மூன்று இலக்கு தாக்குதல்களில் மற்றும் ஆறு துப்பாக்கிச் சூடு தாக்குதலின் போது, இஸ்ரேலியப் படைகள் மொத்தம் ஒன்பது போராளிகளைக் கொன்றதாக தெரிவித்துள்ளது.

கூடுதலாக, இஸ்ரேலியப் படைகள் டஜன் கணக்கான வெடிபொருட்கள் மற்றும் நான்கு வெடிமருந்து ஆய்வகங்களை அகற்றியதாகவும், அதே நேரத்தில் ”பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும்” பலரைக் கைது செய்ததாகவும் அது தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனினில் நடந்த இரண்டு நாள் மோதிலின் போது இஸ்ரேலியப் படைகளின் 19 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, வடக்கில் காயமடைந்த மக்கள் மருத்துவ பராமரிப்புக்கு தடைகளை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மயக்க மருந்து, நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் உட்பட அத்தியாவசிய மருத்துவப் பொருட்களின் பற்றாக்குறையால் காயமடைந்தவர்களில் பெரும்பாலோர் குறைந்தபட்ச சிகிச்சையை மட்டுமே பெறுகின்றனர்.

# ஐஸ்லாந்தில் ஏழாவது முறையாக எரிமலை வெடிப்பு

தென்மேற்கு ஐஸ்லாந்தில் உள்ள ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் உள்ள எரிமலை கடந்த டிசம்பர் முதல் ஏழாவது முறையாக வெடித்துள்ளதாக நில அதிர்வு நடவடிக்கைகளை கண்காணிக்கும் ஐஸ்லாந்தின் வானிலை அலுவலகம் தெரிவித்துள்ளது.

எரிமலையானது நேற்று வியாழக்கிழமை காலை 11:14 மணிக்கு சிறிய எச்சரிக்கையுடன் வெடிப்பு தொடங்கியது. எனினும், இந்த வெடிப்பு கடந்த ஓகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட வெடிப்பைவிடசிறியதாகமதிப்பிடப்பட்டுள்ளது.

எரிமலை வெடிப்பு விமானப் பயணத்திற்கு எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், அருகிலுள்ள நகரமான கிரிண்டாவிக் உட்பட தீபகற்பத்தின் சில பகுதிகளில் வாயு வெளியேற்றம் குறித்து அதிகாரிகள் எச்சரித்தனர்.

மேலும், பாதுகாப்பு காரணங்களுக்காக அந்தப் பகுதியில் இருந்து சுமார் 50 வீடுகள் காலிசெய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# சவூதியில் ஒரே ஆண்டில் 101 பேருக்கு மரண தண்டனை

சவூதி அரேபியாவில் இந்த ஒரே ஆண்டில் 101 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வாறு தண்டனை பெற்றவர்களில் பாகிஸ்தானியர்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிகளவானவர்கள் தொழில் நிமித்தம் சவூதி அரேபியா செல்கின்றனர். அந்நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் மிக கடுமையானதாக உள்ளது.

குற்றம் புரிந்தவர்களுக்கு குற்றம் நடந்த இடத்தில் கடும் தண்டனை விரைவில் வழங்கப்படுவது வழக்கம். இந்நிலையில், 2024ஆம் ஆண்டு 101 பேருக்கு மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தண்டனை நிறைவேற்றப்பட்டவர்கள் போதை பொருள் கடத்தல் ஈடுபட்டவர்களே அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2022, 2023 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2024இல் தண்டனை பெறுபவர்கள் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு தண்டனை பெற்றவர்களில் பாகிஸ்தானியர்களே அதிகம் அடங்குவர். இதன்படி, 21 பாகிஸ்தானியர்கள், 20 ஏமன் நாட்டவர்கள், சிரியா நாட்டைச் சேர்ந்த 14 பேர், நைஜீரியாவைச் சேர்ந்த 10 பேர், ஒன்பது எகிப்தியர்கள், ஜோர்டன், எத்தியோப்பியாவைச் சேர்ந்த தலா 8 பேர், இந்தியா, ஆப்கானிஸ்தான், சூடான் நாடுகளை தலா 3 பேர் என 101 பேருக்கு மரணத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.



# பாகிஸ்தானில் தற்கொலை குண்டு தாக்குதல்

## பலி எண்ணிக்கை 20ஆக அதிகரிப்பு



பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய அதே பகுதியில் மேலும் எட்டு பேர் கொல்லப்பட்ட மற்றுமொரு தனி தாக்குதலைத் தொடர்ந்து உயிரிழப்பு எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் பக்டுங்க்வா மற்றும் பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக தொடர் பயங்கரவாத தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன.

குறிப்பாக பொலிஸார் மற்றும் இராணுவ வாகனங்களை குறித்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கைபர் பக்டுங்க்வா மாகாணத்தில் செவ்வாய்கிழமை இரவு பாதுகாப்பு படையினரின் சோதனைச் சாவடி மீது பயங்கரவாதிகள் தற்கொலை படை தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வெடிகுண்டுகள் நிரப்பிய கார் ஒன்றை மோதச் செய்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதில் 12 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்தலை தொடர்ந்து பயங்கரவாதிகள் மற்றும் பாதுகாப்பு படை வீரர்களிடையே துப்பாக்கி சூடு நடந்தது.

இதில் ஆறு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டிய அதே பகுதியில் மேலும் எட்டு பேர் கொல்லப்பட்ட மற்றுமொரு தனி மோதலைத் தொடர்ந்து உயிரிழப்பு எண்ணிக்கை 20 ஆக உயர்ந்தது.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் தலிபான் ஹபீஸ் குல் பகதூர் ஆயுதக் குழு பொறுப்பேற்றுள்ளது.

இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு பிரதமர் ஷபாஸ் ஷெரீப் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன், எல்லை பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்று இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.

# ஐசிசி டி20 தரவரிசை இந்திய வீரர்கள் ஆதிக்கம்




சர்வதேச ஆடவர் டி20 துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய வீரர் திலக் வர்மா 69 இடங்கள் முன்னேற்றி 806 புள்ளிகளுடன் மூன்றாவது இடம்பிடித்துள்ளார்.

இதன் மூலம் மூன்றாவது இடத்தில் இருந்த இந்திய டி20 அணியின் தலைவர் சூர்யகுமார் யாதவ் நான்காம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளார்.

சூர்யகுமார் 788 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

முதல் பத்து இடங்களில் மற்றொரு இந்திய துடுப்பாட்ட வீரரான யஷஸ்வி ஜெய்ஸ்வால் எட்டாவது இடத்தில் உள்ளார். எவ்வாறாயினும், அவுஸ்திரேலிய வீரர் டிராவிஸ் ஹெட் 855 புள்ளிடகளுடன் முதலிடத்திலும், இங்கிலாந்தின் பில் சால்ட் 828 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளனர்.

சகலதுறை வீரர்களுக்கான பட்டியலில் ஹர்திக் பாண்டியா இரண்டு இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார். இதனால் இங்கிலாந்தின் லியாம் லிவிங்ஸ்டன் பின்தள்ளப்பட்டுள்ளார்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதல் பத்து பந்துவீச்சாளர்களில் இந்திய வீரர்கள் ரவி பிஷ்னோய் எட்டாவது இடத்திலும், அர்ஷ்தீப் சிங் ஒன்பதாவது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்து வீரர் அடில் ரஷித் முதலிடம் பிடித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி இரண்டு டி20 போட்டிகளில் சதம் அடித்து, தொடரின் ஆட்டநாயகனாக திலக் வர்மா தெரிவுசெய்யப்பட்டார். அவர் நான்கு போட்டிகளில் 280 ஓட்டங்கை குவித்திருந்தார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் முதலிடத்தில் இருந்த சூர்யா குமார் யாதவ் தற்போது நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில், சூர்யா துடுப்பாட்ட வரிசையில் தனது மூன்றாவது இடத்தை திலக் வர்மாவிற்கு வழங்கினார்.

இதனால், சூர்யகுமார் யாதவ் மூன்று போட்டிகளில் மட்டுமே துடுப்பெடுத்தாட முடிந்தது. மற்றுமொரு இந்திய வீரர் சஞ்சு சாம்சன் 17 இடங்கள் முன்னேறி 22வது இடத்தைப் பிடித்தார்.

தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக இரண்டு சதங்கள் அடித்ததன் மூலம் அவர் இந்த முன்னேற்றத்தை கண்டுள்ளார். சஞ்சு சாம்சன் கடைசி ஐந்து போட்களில் மூன்று சதங்கள் அடித்தார். இரண்டு போட்டிகளில் ஓட்டங்கள் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# பெருவை வீழ்த்தி நடப்பாண்டை வெற்றியுடன் நிறைவு செய்தது ஆர்ஜன்டீனா

2026ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக்கிண்ணக் உதைப்பந்தாட்டத்தின் தகுதிகாண் போட்டியில் நேற்று இடம்பெற்ற பெரு அணிக்கு எதிரான போட்டியில் 1-0 என வெற்றி பெற்ற ஆர்ஜென்டீனா அணி நடப்பு ஆண்டினை வெற்றியுடன் நிறைவு செய்துள்ளது.

23வது உலகக்கிண்ண உதைப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 2026ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள நிலையில் இதில் 48 அணிகள் பங்கேற்கவுள்ளன. இத்தொடர் மூன்று வட அமெரிக்க நாடுகளின் 16 நகரங்களில் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய இத்தொடரில் பங்கேற்கும் அணிகளைத் தெரிவு செய்வதற்காக தகுதி காண் போட்டிகள் உலகின் பல்வேறு கண்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்றைய தினம் நடப்புச் சம்பியனான லியனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டீனா அணி பெரு அணியை எதிர்கொண்டது.



இப்போட்டியில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திய ஆர்ஜென்டீனா போட்டியின் 55வது நிமிடத்தில் முதல் கோலை அடித்தது.

மெஸ்ஸி கொடுத்த கோலுக்கான பந்துக்கடத்தலினை லாட்டாரோ மார்டினெஸ் கோலாக மாற்றினார். மேலும் இந்த வருடத்தில் ஆர்ஜன்டீனா அணி பங்கேற்ற இறுதி சர்வதேச போட்டி இது என்பதுடன் இவ்வருடத்தினை வெற்றியுடன் நிறைவு செய்துள்ளது.

அதேபோன்று இப்போட்டியில் வெற்றி கோல் அடிக்க லியனல் மெஸ்ஸி உதவியதன் மூலம் அமெரிக்காவின் தேசிய அணியின் ஜாம்பவான் லண்டோன் டோனோவன் சர்வதேச கால்பந்து போட்டிகளில் அதிக கோல்கள் அடிக்க துணைநின்ற (58) சாதனையை சமநிலை செய்துள்ளார்.

மேலும் இந்த கோல் மூலம் மார்டினெஸ் அர்ஜெண்டினா அணிக்காக 35ஆவது கோலை பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அந்த அணியில் ஜாம்பவான் தியாகோ மாரடோனாவின் கோல் சாதனையை சமன் செய்துள்ளார்.

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டியில் மெஸ்ஸி விளையாடுவாரா எனத் தெரியவில்லை. அதுபோன்று இந்தாண்டுக்கான கடைசி போட்டியை மெஸ்ஸி விளையாடியதுடன் இந்த ஆண்டினை தன்னால் மறக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, மெஸ்ஸி தலைமையில் இறுதியாக ஆர்ஜெண்டினா அணி விளையாடிய 70 போட்டிகளில் 65



# டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றார் டிம் சவுதி

இங்கிலாந்து அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடருடன் தனது சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு விடைகொடுக்கப் போவதாக நியூஸிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளரான டிம் சவுதி அறிவித்துள்ளார்.

35 வயதான டிம் டிம் சவுதி கடந்த 2008ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிரான மூவகைத் தொடரின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டிற்கு அறிமுகம் பெற்றார்.

அன்றிலிருந்து இன்று வரை நியூசிலாந்து அணிக்காக 104 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 385 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளதுடன் ஐந்து விக்கெட்டுக்கள் பிரதியை 15 தடவைகளும், 10 விக்கெட் பிரதிகளை ஒரு முறையும் கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் துடுப் பாட்டத்தில் 7 அரைச்சதங்கள் அடங்களா 2185 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

அதேபோன்று ஒருநாள் போட்டிகளில் 221 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளதுடன், 126 டி20 போட்டிகள் பங்கேற்று 164 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 ஆகிய மூன்று வடிவங்களிலும் 300, 200 மற்றும்100 விக்கெட்டுகளை கைப்பற்றிய ஒரே பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் டிம் சவுதி தன் வசம் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் நான்கு ஒருநாள் உலகக்கிண்ணம், ஏழு டி20 உலகக்கிண்ணம், இரண்டு சம்பியன்ஸ் கிண்ண தொடர்கள் மற்றும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி என பல்வேறு முக்கிய போட்டிகளில் நியூசிலாந்து அணியில் இடம்பிடித்திருந்தார் டிம் சவுதி.

குறிப்பாக 18 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் நியூஸிலாந்தின் டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராகவும் சவுதி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பார்டர்-கவாஸ்கர் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்



பெரும் எதிர்பார்ப்பில் இருக்கும் இந்திய – அவுஸ்திரேலிய அணிகள் மோதும் பார்டர்–கவாஸ்கர் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது. இலங்கை நேரப்படி இன்று காலை 7.30க்கு போட்டி ஆரம்பிக்கின்றது.

இந்த தொடர் இரு அணிகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு செல்ல இந்த தொடர் இரு அணிகளுக்கும் முக்கியமானதாகும்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தொடர்ந்து மூன்றாவது முறையாக நுழைய வேண்டுமாக இருந்தால் இந்த தொடரில் நான்கு போட்டிகளில் இந்தியா வெற்றிபெறவேண்டும்.

ஆகையினால் தொடரை கைப்பற்ற இரு அணிகளும் கடுமையாக முனைப்பு காட்டும்.

ரோகித் சர்மா தலைமையிலான அணி சமீபத்தில் நியூசிலாந்திடம் சொந்த மண்ணில் மூன்று டெஸ்டிலும் தோற்று வெள்ளையடிப்பு செய்யப்பட்டது. இந்த தோல்வி பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், அவுஸ்திரேலியாவில் கடைசியாக விளையாடிய இரண்டு டெஸ்ட் தொடரையும் இந்தியா கைப்பற்றி இருந்தது. தற்போது மூன்றாவது முறையாகவும் தொடரை கைப்பற்றும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

அவுஸ்திரேலிய அணி கடைசியாக பெப்ரவரி–மார்ச் மாதங்களில் நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியது. இரண்டு டெஸ்ட் போட்டியிலும் வெற்றிபெற்று அசத்தியிருந்தது.

இந்த நிலையில் இந்திய – அவுஸ்திரேலிய அணிக்குக்கு இடையிலான முதல் டெஸ்ட் பெர்த்தில் இன்று தொடங்குகிறது. இந்திய அணிக்கு வேகப்பந்து வீரர் பும்ரா தலைமை தாங்கவுள்ளார். உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரரான விராட் கோலி சமீபகாலமாக ஓட்டங்கள் குவிக்க முடியாமல் நெருக்கடியில் இருக்கிறார். இந்நிலையில் இந்த தொடர் அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கலாம். அவர் நல்ல நிலைக்கு திரும்புவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

# சீனா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் இந்திய ஜோடி வெற்றி

சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சாத்விக்–சிராக் ஜோடி வெற்றிபெற்றுள்ளது.

பல முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்ளும் சீனா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி ஷென்ஜென் நகரில் நடந்து வருகிறது.

இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் சாத்விக்– சிராக் ஜோடி, சீன தைபே ஜோடியுடன் மோதியது.

இந்தப் போட்டியில் சிறப்பாக ஆடிய இந்திய ஜோடி 12–21, 21–19, 21–18 என வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.



# இஸ்ரேலின் மிருகத்தன தாக்குதல்; உயிருக்கு போராடும் இளம் கால்பந்து வீராங்கனை



கால்பந்து நட்சத்திரங்களான லியோனல் மெஸ்ஸி, கிறிஸ்டியானோ ரொனால்டோ போன்று தானும் வரவேணடும் என்று கனவு கண்ட லெபனானின் இளம் வீராங்கனை ஒருவர் இஸ்ரேலின் கொடூர தாக்குதலில் சிக்கி தற்போது சுயநினை இழந்துள்ளார்.

லெபனான் தேசிய மகளிர் கால்பந்து அணியில் விளையாடும் தனது கனவை நனவாக்கத் தயாராகி வந்த 19 வயதான செலின் ஹைதர், இஸ்ரேல் தாக்குதலில் காயமடைந்து தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலியப் படைகளால் குண்டுவீசித் தாக்கப்பட்ட தெற்கு பெய்ஷரூட் பகுதியில் இருந்து வெளியேறிய ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களில் செலினின் குடும்பமும் ஒன்று.

எவ்வாறாயினும், செலின் படிப்பு மற்றும் பயிற்சிக்காக பெய்ஷரூட் திரும்ப வேண்டியிருந்தது என்று அவரது தந்தை தெரிவித்துள்ளார். தீவிர அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வீட்டை விட்டுவெளியேறும் செலின் இரவு உறங்கும் நேரத்திலேயே வீடு திரும்புவார்.

இந்நிலையில், தனது வீட்டிற்கு அருகில் ஷியா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் செலின் பலத்த காயம் அடைந்தார். செலின் ஹைதர் ரத்த வெள்ளத்தில் மயங்கி தரையில் கிடக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது.

கடந்த ஆண்டு லெபனான் பெண்கள் கால்பந்து லீக்கை வென்ற பெய்ஷரூட் கால்பந்து அகாடமியின் அதிகார மையமாக 19 வயதான செலின் ஹைதர் இருந்தார்.

எதிர்பார்த்தது போலவே, விரைவில் தேசிய அணிக்கு அழைக்கப்படுவார் என்று அவள் உறுதியாக இருந்தபோதிலும், இஸ்ரேலின் கொடூரத்தால் தற்போது அவருடை உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு மேற்காசிய 19 வயதுக்குட்பட்டோருக்கான கால்பந்து கூட்டமைப்பு சம்பியன்ஷிப்பை வென்ற அணியில் செலின் உறுப்பினராக இருந்தார். “தலையில் அடிபட்டதாலும், உடைந்ததாலும் தன் மகள் சுயநினைவின்றி இருப்பதாக செலினின் கூறியுள்ளார். தன் மகளுக்கு அழகான கனவுகள் இருந்தன. ஆனால் அவர்கள் அந்த கனவை கொலை செய்துவிட்டனர். ஆனாலும் என் மகள் சளைக்காத நாயகி என்றும், இந்த உயர் போராட்டத்தில் வென்று மீண்டும் களம் திரும்புவார்” என்று தாய் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 நவம்பர் 22ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.